விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 தை 09 சனிக்கிழமை (23.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

# அறிவிலிகளாக நாம் செயற்படக் கூடாது!


## தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து சந்திரிகா கருத்து



(கொழும்பு)

தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ளும் விடயத்தில் நாம் அறிவிலிகளாக செயற்படுவதை நிறுத்த வேண்டும் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நம் நாட்டில் முட்டாள் சிங்களவர்கள், முட்டாள் தமிழர்கள், முட்டாள் முஸ்லிம்கள் என சிலர் இருக்கவே செய்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார். (23-ம் பக்)

## சுவிஸ் ஜனாதிபதியை சந்தித்தார் ரணில்



(சூரிச்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுவிட்ஸர்லாந்து ஜனாதிபதி ஸ்னை

24ஆம் பக்கம் பார்க்க....

## இந்.போர்க் கப்பலை அமை.குழு பார்வை

(கொழும்பு)

மூன்று நாள் பயணமாக கொழும்புத் துறைமுகம் வந்துள்ள இந்தியக் கடற்படையின் மிகப்பெரிய விமானந்தாங்கிப் போர்க்கப்பலான ஐ.என்.எஸ் விக்கிரமாதித்யாவை இலங்கை அமைச்சர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று

23ஆம் பக்கம் பார்க்க....

## தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த (சா/த), (உ/த)

## பரீட்சைத் திகதிகள் அறிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை மற்றும் கல்விப் பொதுத தராதர உயர்தரப் பரீட்சை என்பனவற்றிற்கான திகதி விபரங்களை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகி ஒகஸ்ட் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் கவிப்பேரரசு வைரமுத்து; முதலாவது விஜயத்தில் முதல்வருடன் சந்திப்பு








(யாழ்ப்பாணம்)

தமிழக கவிஞரும் பாடலாசிரியருமான கவிப்பேரரசு வைரமுத்து இலங்கைக்கு முதல் முறையாக விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்றையதினம் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த அவர், முதலில் வட மாகாண முதலமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க....

## முதலமைச்சரை அவமதிக்காதீர்!



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சிலர் அவமதிப்பு செய்வதைக் கண்டித்தும் அவரை சுதந்திரமாக செயற்பட அனுமிக்க வேண்டும் என வலியுறுத்தியும் தனி ஒருவரினால் யாழில் நேற்று அடையாள உண்ணாவிரதம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(விரிவான செய்தி 06-ம் பக்கத்தில்)

## குடும்பப் பெண் மீது கத்திக் குத்து!

(யாழ்ப்பாணம்)

பெண் ஒருவரால் கத்திக் குத்துக்கு இலக்கான பிறிதொரு குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் குப்பிளான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குப்பிளான் வடக்குச் சந்தியைச்

23ஆம் பக்கம் பார்க்க....

## விசர் நாய் கடித்ததில் 11 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சிவன் கோவில் பிரதேசத்தில் வசித்த 11 பேரை கடித்த விசர் நாய் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை இறந்துள்ளது.

இந்த விசர் நாய் கடித்ததில் பாதிக்கப்பட்ட 11 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கி

23ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் பிரச்சினையை தீர்க்கும்போது விருப்பு வாக்கு பற்றி சிந்திக்காதீர்கள்!

## அரசியல்வாதிகளுக்கு ஜனாதிபதி அறிவுரை



(புத்தளம்)

பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்க்கும்போது விருப்பு வாக்குகளை பற்றி சிந்திக்காது தேசிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பாடுபடுவது அரசியல்வாதிகளின் பொறுப்பாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் அல்லது 5 ஆண்டுகளின் பின் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் பற்றி சிந்திக்காது பொது மக்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய தொழில்நுட்ப அறிமுகத்துக்காக மைக்ரோசொப்ட் நிறுவனம் இலங்கையுடன் ஒப்பந்தம்



(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துடன் தொழில்நுட்பம் சார்ந்த ஒப்பந்தங்களில் மைக்ரோசொப்ட் நிறுவனம் கைச்சாத்திடவுள்ளதாக அதன் தலை

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கோழி இறைச்சி விற்பனை



உள்ளூர் உற்பத்தி செய்யப்பட்ட புறொ யிலர் (கல்பேட்) சுகாதாரமான முறைப் படி சுத்தம் செய்து தினமும் காலை 6.00 தொடக்கம் மாலை 8.00 வரை நியாய மான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம். (3302)

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

## நாய்க்குட்டி விற்பனை

3 மாதம் நிரம்பிய Original Doman நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. (3373)

தொடர்புகளுக்கு :
0768035083

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**ENGLISH HALL**
ஆங்கில வகுப்புகள் (தரம் 6 முதல் O/L வரை) JAFFNA
P.N சுதர்ஷன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(3378) தொடர்பு : 0773144527


# பிற்போடல்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம், கிளிநொச்சி கற்கை நிலையம் மற்றும் முல்லைத்தீவு கற்கை நிலையத்தின் சகல பரீட்சைகள், நாட் பாடசாலைகள் மற்றும் இதர கல்விசார் நடவடிக்கைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று 23ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(செ)


## உடன் வேலைவாய்ப்பு

யாழ் நகரில் முன்னணி வகிக்கும் ஸ்தாபனம் (catering) தனது புதிய கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோருகின்றன.

1. காசாளர்
2. உணவு பரிமாறுபவர் (Waiter)

நேர்முகத்தேர்வு :- 22- 25 திகதிகள்
நேரம் :- 9.00-4.00 வரை
இடம் :- 147, பலாலி றோட், திருநெல்வேலி.

0773294341

(C-3525)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.



போதகர்.அன்ரனி லாசர்
Bachelor of Management



செல்வி. சாமினாகிறேஷ்.லாசர்
Bachelor of Fine Arts

28.12.2015 அன்று கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற Global University USA பட்டமளிப்பு விழாவில் **B.A** பட்டம் பெற்ற அன்ரனி லாசர் அவர்களையும் 20.01.2016 அன்று யாழ் பல்கலை கழகத்தில் நடைபெற்ற 31வது பொது பட்டமளிப்பு விழாவில் **B.F.A** பட்டம்பெற்ற செல்வி சாமினாகிறேஷ் அவர்களையும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இன்னும் இன்னும் உயர்ந்து உச்சத்தை தொடுக...

உளமாற வாழ்த்தும் உறவுகள்
புத்தூர் கிழக்கு
அம்மாச்சி குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி நவமணி ராஜகுமார்
B.A (Hons) Tamil sp. 1st class, P.G.D.E, M.Phil in Tamil, M.Ed (1st class)

யா/இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் ஆசிரியர்; யாழ் யோக அரங்க மாணவி; நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் சேவகி ஆகிய திருமதி நவமணி ராஜகுமார் அவர்கள் 19.01.2016 செவ்வாய்க்கிழமை யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 31ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப்பட்டம் (M.Ed 1st class - batchtop) பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

171/01, அறுபத்து மூன்று
நாயன்மார் குருபூசை மடம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(3375)

வாழ்த்துவோர் :
மாணவர் சமூகம்
இரண்டாவது அணி-2015 ,
யாழ் யோக அரங்க நிறுவனம்

## மரண அறிவித்தல்

### அமரர் சுப்பிரமணியம் யோகராசா



முள்ளியவளை 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் யோகராசா அவர்கள் கடந்த 2016-01-20 அன்று இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் சுப்பிரமணியம்-நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், சிவாசினியின் அன்புக் கணவரும், கயூபன், சஜீபன், காணப்பிரியா, யதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

3ம் வட்டாரம்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

(C-3576)

தகவல் :-
குடும்பத்தினர்
0776665170

## அகவை அறுபது காணும் சிறிகுமாரனே உம்மை அன்புடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்



திரு சண்முகம் சிறீகுமாரன்
இருமொழிக் கல்வி இணைப்பாளர்
( ஆங்கில மொழி மூலமான விஞ்ஞான ஆசிரியர் )
B.Sc, Dip in Ed, M.ED

சிரித்த முகத்துடன் சீரிய பணிபுரிந்த சிறீகுமாரனே!

கள்ளமில்லாப் பேச்சினாலும் கனிவான பார்வையாலும்
எம் உள்ளங்களைக் கவர்ந்தனை
பல்துறை ஆளுமையும் பணிவான பேச்சும் கொண்டு
இந்து ஆசானாய் இன்முகத்துடன் இயங்கினை
இருமொழிக்கல்வியை இந்துவில் விதைத்து
விளைவு கண்டு பூரித்தனை
இந்து ஆசிரியர் கழகத்தை இங்கிதமாய் இயக்கி
இறுப்பூது எய்தினை
உம் ஓய்வுக்காலம் உன்னதமாய் ஒளிர்ந்திட
நன்னயமாய் வாழ்த்தி ஞானவைரவர்
அருள் வேண்டிப் பணிகின்றோம்.

CONGRATULATIONS!

ஆசிரியர் கழகத்தினர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(C-3524)

# ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் ஜெனிவாவிடம் உதவி கோரல்

(கொழும்பு)

**ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஜெனிவாவிற்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பாராளுமன்றத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பிலேயே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

உதயகம்மன்பில, காமினி லொக்குகே, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, மஹிந்தானந்த அழுத்கமகே, வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்த்தன உள்ளிட்டவர்கள் இந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளதாகவும் தெரிவிக்கபடுகின்றது.

மேலும், பாராளுமன்ற நடவடிக்கையின் போது அங்கு இடம் பெறும் குறைபாடுகள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தும் படி அனைத்து பாராளுமன்ற ஒன்றியத்தின் சார்பாக இந்தக் கடிதம் ஜெனிவாவிற்கு அனுப்புவதற்காக எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வில்பத்து விவகாரம்

### எதிர்ப்பை வெளியிட்ட றிசாத்துக்கு அவகாசம்

வில்பத்து தேசிய வனாந்தரத்தில் குடியேற்றங்களை அமைத்தமை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவுக்கு எதிர்ப்பைச் சமர்ப்பிக்க, வழக்கின் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம், மார்ச் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட முன்னிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, அவர் மேற்கண்டவாறு கால அவகாசம் வழங்கினார்.

வில்பத்து தேசிய வனாந்தரத்துக்கு உரித்துடைய ஆயிரக் கணக்கான ஏக்கர், சட்டவிரோதமான முறையில் சுத்தப்படுத்தி அதில் மீள் குடியேற்றம் செய்தமை மற்றும் சட்டவிரோதமான நிர்மாணங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கோரி, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சுற்றுசூழல் நீதிக்கான மையம தாக்கல் செய்த இந்த மனுவில், வன ஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறே, ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, மன்னார் மாவட்ட செயலாளர், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் றிசாத் பதியுதீன், சட்டமா அதிபர் உள்ளிட்ட ஒன்பது பேர், பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையாகவில்லை

எம்பிலிப்பிட்டி உயர் பொலிஸ் அதிகாரிகள் மனித உரிமை ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலை யாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எம்பிலிப்பிட்டி இளைஞர் மரணம் தொடர்பிலான விசாரணைகளுக்காக எம்பிலிப்பிட்டி பிரதேசத்திற்குப் பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் உத்தியோகத்தர்களை இலங்கை மனித உரிமை ஆணைக் குழு விசாரணைகளுக்காக அழைத்திருந்தது. எனினும் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த விசாரணைகளில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி ஆகியோர் மனித உரிமை ஆணைக் குழுவில் முன்னிலையாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## படகு கவிழ்ந்து விபத்து அகதிகள் 20 பேர் பலி!



உள்நாட்டுப் போரால் நிலை குலைந்துள்ள ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர். பல்வேறு நாடுகளுக்கு கடல் கடந்து செல்லும் அகதிகள் இறப்பர் படகுகள் போன்றவற்றில் பாதுகாப்பற்ற முறையில் பயணம் செய்கின்றனர்.

மத்திய தரைக்கடல் வழியாக இவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர்கதை ஆகி வருகிறது. அண்மைக் காலமாக ஐரோப்பிய நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ள மக்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 10 இலட்சத்தை எட்டியுள்ளது. இருப்பினும், உள்நாட்டில் பசி, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள லிபியா நாட்டு மக்கள் இன்றும் அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக படையெடுத்தபடியே உள்ளனர்.

அங்காரா நாட்டு கடல் எல்லை வழியாக கிரீஸ் நாட்டுக்குள் நுழைநது விடாமல் அங்கிருந்து பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று அங்கே அகதிகளாக குடியேறி விடலாம் என்பது இவர்களின் விருப்பமாக உள்ளது.

இந்நிலையில், கிரீஸ் நாட்டில் நுழைவதற்காக சிரியாவைச் சேர்ந்த சிலர் மத்திய தரைக்கடல் வழியாக இறப்பர் படகுகளில் பயணம் செய்து கொண்டிருந்தனர். கலோனிம்னோஸ் தீவு அருகே வந்த போது படகு நேற்று அதிகாலை திடீரென நீரில் மூழ்கியது. இந்த விபத்தில் 21 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

தகவல் அறிந்ததும் கிரீஸ் கடலோர காவற்படையினர் மற்றும் பேரிடம் மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து உயிரிழந்தவர்களின சடலங்களையும் உயிருக்கு போராடிக்கொண்டிருந்தவர்களையும் மீட்டனர். மேலும் சிலரைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.(இ)

## கத்திக்குத்துக்கு இலக்கான பாதுகாப்பு அதிகாரி மரணம்

குருநாகல்- யட்டிவெஹரவத்த பிரதேசத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கத்திக்குத்துக்கு இலக்கான நபர். படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பாதுகாப்பு அதிகாரிக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் சந்தேக நபர் இந்த அதிகாரி மீது கத்தியால் குத்திவிட்டு அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

## மக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவேன்

### கோத்தபாய அதிரடி அறிவிப்பு

பொதுமக்கள் விரும்பினால் அரசியலுக்கு வர தயாராக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரக்னா லங்கா ஆயுத நிறுவனம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கிய பின்னர் வெளியில் நின்றிருந்த ஊடகவியலாளர்களிடம் கோத்தபாய இதனைத் தெரிவித்தார்.

நாட்டுக்கு பலமான எதிர்க்கட்சி ஒன்றின் அவசியம் குறித்து இதன் போது அவர் வலியுறுத்தல் விடுத்தார்.

இந்தநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனை எதிர்க்கட்சி தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் கோத்தபாய தெரிவித்தார். இதே வேளை புதிய எதிர்க்கட்சி அரசியல் முன்னணி உருவாக்கப்படும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய



சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் பங்கு இந்த முன்னணியில் இருக்குமா? என்று கேள்விக்கு பதிலளித்துள்ள விமல், அது தொடர்பில் தெரிவிப்பதற்கு தற்போது நேரம் வரவில்லை என்று தெரிவித்தார். (இ)

# சிறுநீரக மோசடி விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு இந்தியாவின் உதவியைக் கோருகின்றது இலங்கை

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இடம்பெறும் சட்டவிரோத சிறுநீரக மாற்று மோசடி தொடர்பில் ஆராய அமைக்கப்பட்டிருக்கும் மூவர் அடங்கிய குழுவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதார அமைச்சு, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கு சட்டவிரோதமான முறையில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மேற்கொள்ளப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன. இது குறித்துக் கவனம் செலுத்திய சுகாதார அமைச்சு, குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு மூவர் அடங்கிய குழுவொன்றை அமைத்துள்ளது.

சுகாதார அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் பாலித மஹிபால, தனியார் வைத்தியசாலையொன்றின் பணிப்பாளர் உட்பட மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

இந்தக் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்திருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அநுர ஜயவிக்ரம தெரிவித்தார்.

அதேநேரம், விசாரணை அறிக்கையின் பிரகாரம் தனியார் வைத்தியசாலைகளும் மருத்துவர்களும் தவறு செய்திருந்தால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் சிறுநீரக மாற்று மோசடி குறித்து வினவப்பட்டது. 6 மருத்துவர்கள் இதனுடன் தொடர்புபட்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்ட போதும் எமக்கு எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை. சி.ஐ.டிக்கு இது தொடர்பில் அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

தனியார் வைத்தியசாலைகளில் வெளிநாட்டவர்களுக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை வழங்குவதை தடைசெய்வதற்காக சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அதேநேரம், வெளிநாட்டில் இருந்து உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கு வருபவர்கள் சுகாதார அமைச்சிடம் முற்கூட்டியே அனுமதி பெற வேண்டும். இருந்தபோதும் உறுப்புக்களைத் தானம் செய்பவர்கள் தொடர்பில் வழங்கப்படும் தகவல்களை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக சுகாதார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# ஸ்ரீபன் குக், அம்லா சதம் தென்னாபிரிக்கா சிறப்பாட்டம்





அறிமுக வீரர் ஸ்ரீபன் குக் அம்லாவின அபார சதத்தால் இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் முதல்நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி சிறப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்கா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று செஞ்சூரியனில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற டி வில்லியர்ஸ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். அந்த அணியில் தொடக்க வீரர் வான் சைல் நீக்கப்பட்டு ஸ்ரீபன் குக் சேர்க்கப்பட்டார். அத்துடன் விக்கெட் கீப்பர் விலாஸ் நீக்கப்பட்டு டி காக் சேர்க்கப்பட்டார்.

தொடக்க வீரர்களாக ஸ்ரீபன் குக், எல்கர் ஆகியோர் களம் இறங்கினார்கள். தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கை 35 ரன்னாக இருக்கும் போது எல்கர் 20 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து ஹசிம் அம்லா குக் உடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி மிகவும் அபாரமாக விளையாடியது. இருவரும் அடுத்தடுத்து அரைசதம் அடித்து சதத்தை நோக்கி நகர்ந்தனர்.

முதல் நாள் தேநீர் இடைவேளைக்கு சற்று முன் அம்லா சதம் அடித்தார். தேநீர் இடைவேளை வரை தென்னாபிரிக்க அணி 58 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 224 ரன்கள் எடுத்திருந்தது. அம்லா 101 ரன்னுடனும், ஸ்ரீபன் குக் 91 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

தேநீர் இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கும் நேரத்தில் மழைத்துளிகள் விழுந்தன. இதனால் ஆட்டம் சிறுது நேரம் நிறுத்தப்பட்டது. பின்னர் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய அம்லா 109 ரன்னில் ஸ்டம்பை பறிகொடுத்தார். அடுத்து கப்டன் டி வில்லியர்ஸ் களம் இறங்கினார். இவர் 2 பந்துகளை மட்டும் சந்தித்து டக்அவுட் ஆனார். மறுமுனையில் ஸ்ரீபன் குக் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். அத்துடன் 33 வயதில் அறிமுகமாகி சதம் அடித்த பெருமையை பெற்றார். அத்துடன் அறிமுக போட்டியில் சதம் அடித்த 100-வது துடுப்பாட்ட வீரர் என்ற வாய்ப்பையும் பெற்றார்.

நேற்றையமுதல் நாள் முடிவில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டு இழப்புக்கு 329 ஓட்டங்களை பெற்றுள்ளது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**01.வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் (on-call basis) வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரல்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் மற்றும் விவசாய பீடத்தின் பாவனைக்காக வான் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

- வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்.
- தூரக் கணிப்பீடுகள் யாவும் அறிவியல்நகர், கிளிநொச்சியை மையமாக வைத்தே கணிப்பிடப்படும்.
- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வாகன உரிமையாளர்களது வாகனம் விரும்பத்தக்கது.

**02.பொறியியல் பீடத்திற்கான வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரல்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் பீடத்தின் பாவனைக்காக மாதாந்த கொடுப்பனவு அடிப்படையில் வான் ஒன்றை வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

வெற்றி பெறும் மனுதாரர் எரிபொருளுடன் வாகனத்தை வழங்கும்படி வேண்டப்படுவார்.

மேற்படி வாகனங்களது முதற்பதிவு 2016ஆம் ஆண்டில் இருந்து 05 வருடங்களுக்கு மேற்படாமலும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2016ஆம் ஆண்டில் இருந்து 07 வருட்ங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். வாகனம் பூரண காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**வாகன விபரம்**

| வாகன வகை | எரிபொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| பயணிகள் வான் (van) (14 அல்லது 15 ஆசனங்கள்) அல்லது அதற்கு மேல் | டீசல் (dual AC) | 01 |

மேற்படி வாகனங்களது விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விலைமனு ஆவணங்களையும் மற்றும் மேலதிக விபரங்களையும் தனித்தனியாக பூர்த்தி செய்து 29.01.2016 மதியம் 12.00 மணிவரை சிரேஸ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகக்கிளை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= இனை பல்கலைக்கழக காசாளர் கரும்பீடத்தில் அல்லது மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பொறியியல் பீடத்திற்கு வாகனம் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கு "வாகனம் ஒன்றை பொறியியல் பீடத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டும், "வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்குவதற்கு வாகனம் ஒன்றை அழைப்பின் பெயரில் வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டும், 08.02.2016 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவோ அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படவோ வேண்டும்.

மேற்படி வாகனங்களது கேள்வி விண்ணப்பங்கள் 08.02.2016 அன்று பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் மனுதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ஆவணங்கள் திறக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம். கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்**
**கேள்விச் சபை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**
**22.01.2016**

(சீ-3523)


## குப்தில், அண்டர்சன் அதிரடி

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தொடரை வென்றது நியூசிலாந்து



குப்தில், அண்டர்சன் துடுப்பாட்டத்தில் மிரட்ட, பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான இருபது-20 போட்டியில் நியூசிலாந்து அணி 95 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றதுடன் தொடரையும் 2:1 என்ற கணக்கில் அசத்தலாக கைப்பற்றியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் 2 போட்டிகள் நிறைவில் 1:1 என்ற கணக்கில் சமனிலையாக இருந்தது. இந்நிலையில், தொடரை தீர்மானிக்கும் 3 ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று வெலிங்டனில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணி அதிரடியில் மிரட்டியது. குப்தில் 19 பந்தில் 6 பவுண்டரி, 2 சிக்சருடன் 42 ஓட்டங்களும் வில்லியம்சன் 33 ஓட்டங்களும் எடுத்தனர்.

வாணவேடிக்கை காட்டிய கோரி அண்டர்சன் ஆட்டமிழக்காமல் 42 பந்துகளில் 6 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் 82 ஓட்டங்கள் குவித்தார்.

நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 197 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது.

ஆனால் நியூசிலாந்தின் பந்துவீச்சு தாக்குதலை சமாளிக்க முடியாமல் 16.1 ஓவர்களிலேயே 101 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால் நியூசிலாந்து அணி 95 ஓட்டங்களால் வெற்றி பெற்று தொடரை 2:1 எனக் கைப்பற்றியது.

மில்ன், எலியட் ஆகியோர் தலா 3, அண்டர்சன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக நியூசிலாந்தின் அண்டர்சன் தெரிவானார். (க)






அண்மையில் சர்வமத குருமார்களின்-சமயங்களுக்குள் முரண்பாடு, சமயங்களுக்கிடையிலானமுரண்பாடுகள் என்னும் கருப்பொருளில் கலந்துரையாடல் தாய்லாந்து பாங்கொக்கில் நடைபெற்றது. இதில் இலங்கையில் இருந்து 13 மத குருமார்களும் அதில் யாழ்ப்பாணத்தில் இருந்து வீணாகான குருபீடத்தின் அமைபபாளர் சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ.சப்ா. வாசுதேவக்கருக்கள், சின்மயாமிஷன் சுவாமிகள், சைவக்குருமார்கள் அவையில் இருந்து சிவஸ்ரீ.கிருபானந்தக் குருக்கள் மற்றும் ஸ்ரீ.கோகுலன்ஐயா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

# அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்



## தைப்பூச தின உலகப் பெரு மஞ்சத் திருவிழா
## சிறப்புப் பொங்கல் 24.01.2016





**காலம் :-** 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 பூஜை இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து காலை 6 மணிக்கு 1008 பாற்குடங்கள் பவனியாக வருவதுடன் அதன்பின் காவடிகள் பவனியாக வரும். 7.00 மணிக்கு 1008 சங்குகளாலும் 1008 பாற்குடப் பவனியில் வரும் பாற்குட அபிஷேகம் இடம் பெறும்.

7.30 – 8.30 வரை நுழைவாயில் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறும்

மதியம் அன்னதானம் நடைபெறும்

**முற்பகல் 10.00 மணிக்கு 1008 பானை பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகும்**

**மாலை 4 மணிக்கு முன் நிறைவு செய்தல் வேண்டும்.**

மாலை 2 மணி தொடக்கம் 4 மணிவரை யாழ்.நுண்கலைப்பீட மாணவர்களது இசைக்கச்சேரியும் இடம்பெறும்

தொலைவிலிருந்து வந்து பொங்கல் செய்யவிரும்பும் அடியவர்கள் வசதி கருதி பொங்கலுக்குரிய அனைத்துப் பொருட்களையும் ஆலயத்தில் சிறு தொகைப் பணத்தினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

**7.00 மணிக்கு உலகப்பெரு மஞ்சத்தில் முருகப்பெருமான் வீதி வலம் வரும் அருட்காட்சி இடம்பெறும்.**

**அதனைத்தொடர்ந்து இலங்கையின் புகழ் பூத்த பல பாடகர்கள் சங்கமிக்கும் இன்னிசைக் கானங்கள் இடம்பெறும்.**

## ஓம் ரீவியில் இரவு 6 மணி – 9 மணிவரை நேரடி ஒளிபரப்பு நடைபெறும்


விளம்பர அனுசரணை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஸ்ரீ வாலாம்பிகை & சன்ஸ்
Nitharsana Electrial Centre –
கே.கே.எஸ் வீதி
இணுவில்.
TP:- 077 316 4485

Sri Ram Gym
ஸ்ரீ ராம் ஜிம்



ஸ்ரீராம் GYM 18 வருடங்களாக
இளைஞர்கள், யுவதிகளின் நன்மதிப்பைப் பெற்ற உடற்பயிற்சி நிலையம்
K.K.S வீதி, இணுவில்

கட்டடப் பொருட்கள், பெயின்ட் வகைகளை நியாய விலையில் பெற்றிட
ரஞ்சன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
மருதடி கோவிலடி,
யாழ்.வீதி.

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள், மொத்த, சில்லறை விற்பனை நிலையம்
மகுடம் புத்தக நிலையம்
K.K.S வீதி,
இணுவில் சந்தி.


# இராசி பலன்

23.01.2016

(தை 09, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு, சதுர்த்தசி முற்பகல் 8.17 மணிவரை புனர்பூசம் முன்னிரவு 9.02 மணிவரை சுபநேரம் 3.36-5.06 மணிவரை இராகுகாலம் 9.36-11.06 மணிவரை பூரணை விரதம்.

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மூலம், பூராடம்<br>பகல் 2.24 ற்கு<br>கட-சந் | | |
| சூரி | | | ராகு |
| புத சுக் | சனி | செவ் | குரு |

**மேடம்** – பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றல்களால் சிறப்புக்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**இடபம்** – தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலை விரிபுபடுத்தும் சிந்தனை மேலோங்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** – நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வழிபாடு காரிய வெற்றிதரும், வார்த்தைகளால் பிறரைக் கவருவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

**கடகம்** – ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், வைராக்கியத்தோடு வெற்ட்டு வக்குறுதிகளை காப்பாற்றுவீகள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** – உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்வீர்கள், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொள்கையை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகலாம்.

**கன்னி** – செல்வ நிலை உயரும் நாள், இளைய சகோதர வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறும், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**துலாம்** – புதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும், உங்களின் செல்வாக்கு மேலோங்கும்.

**விருச்சிகம்** – சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுற்றத்தாரின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு** – மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படட நேரிடலாம், காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் இடம்பெறலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**மகரம்** – நட்பு வட்டம் விரிவடையும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**மீனம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கைகூடும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

# வருமான பரிசோதகர்கள் 15பேருக்கு நியமனக்கடிதம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கீழ் கடமையாற்றுவதற்காக வருமான பரிசோதகர்கள் 15 பேருக்கான நியமனங்கள் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனால் நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் அமைச்சில் முதலமைச்சரின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,

வட மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் காணப்பட்ட வருமான பரிசோதகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி 57 பேருக்கான நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

இவ்களுள் இதுவரை கடமையை பொறுப்பேற்காத 15 பேரின் இடத்திற்கு முன்னர் நடைபெற்ற போட்டிப்பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 15 பேருக்கான நியமனம் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நியமன கடிதங்களை வழங்கிவைத்தார்.

இதில் முதலமைச்சரின் அமைச்சின் பிரதம கணக்காளர் ப.ஜெயராஜ், நிர்வாக உத்தியோகத்தர் ஜோ.லோரன்ஸ், முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ராஜதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# வெளிநாட்டு இளைஞர் பரிமாற்ற— வேலைத்திட்டத்துக்கு நேர்முகத்தேர்வு

(யாழ்பபாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இந்த் ஆண்டு திட்டத்தின் கீழ் வெளிநாடு செல்வதற்காக இளைஞர், யுவதிகளை தெரிவு செய்யும் நேர்முகத்தேர்வு எதிர்வரும் புதன்கிழமை (27.01.2016 ஆம் திகதி) முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கீழ்வரும் தகுதியுடைய இளைஞர்.யுவதிகள் அன்றைய தினம் உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் மூன்று வருடங்கள் இளைஞர் கழக அங்கத்தவராக இருத்தல், 2016 ஆம் ஆண்டு பதிவு செய்த இளைஞர் கழக அங்கத்தவராக இருத்தல், க.பொ.த.சாதாரண தரத்தில் ஆங்கில மொழி சித்தியும் ஆங்கில பேச்சுத்திறனும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் இதற்கு முன் வெளிநாட்டு பயணங்களில் பங்குபற்றாதவராயிருத்தல், வேறு தொண்டர் அமைப்பு நட வடிக்கைகளில் ஈடுபடல், கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறையில் திறமை இருப்பவர்கள் சமுகமளிக்க முடியும்.

மேலதிக விபரங்களை 021 222 2526 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# யோகாசன தியான புதிய வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சிவநாத குருபீட வேதாந்தமடம் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமத்தின் யோகாசன தியான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

சனி, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களுக்குரிய வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன.

வார நாட்களுக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன.

மேலும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மாலை 6.30 மணிமுதல் இரவு 7.30 மணி வரை தியான வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

மேற்படி வகுப்புக்களில் ஆண், பெண் என வயது வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ள முடியும்.

கலந்து கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணம் கந்தர்மடம் இல.18, குமாரசாமி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத கருமபீடம் அமைந்துள்ள வேதாந்த ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் இலவச யோகாசன வகுப்புப் பிரிவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் 3 பிரிவுகளாக இவ் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.


இதற்கமைய காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும் தொடர்ந்து பிரிவு 2 இல் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை ஆண்களுக்கும் பிரிவு 3 இல் காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை பெண்களுக்கும் வகுப்புக்கள் நடைபெறும்.

பதிவுகள் முன்கூட்டியே மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021 322 5393 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மிருதங்கம், வயலின், சங்கீதம் மற்றும் பண்ணிசை வகுப்புக்களும் இலவசமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

# வடக்கு மாகாண முதலமைச்சரை அவமதிப்பு செய்யாதீர்

## யாழில் நேற்று அடையாள உண்ணாவிரதம்



வடக்கு மாகாண முதலமைச்சரை அவமதிக்கும் செயற்பாடுகளை கண்டித்து நேற்றையதினம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தந்தை செல்வா சதுக்க முன்றிலில் அடையாள உண்ணா விரத போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

வரணி இயற்றாலை பகுதியை சேர்ந்த நாகேந்திரன் துஷந்த் என்பவரே இந்த அடையாள உண்ணா விரதத்தை மேற்கொண்டிருந்தார்.

அவர்தனதுகோரிக்கையில்,

1. கூட்டமைப்பு அரசியல் வாதிகளே! தமிழ் மக்களின் பெயரால் போரின் வலிசுமந்து வாழும் மக்களின் பெயரால் ஒன்றுபட்டு செயற்படுங்கள்.

2. வடமாகாண சபை உறுப்பினர்களே, அமைச்சர்களே! ஜீவா செல்வகுமாரி (வற்றாப்பளை) போன்றோரின் குடும்ப வறுமையை- குறைந்தபட்சம் உணவுக்கும் வழியற்றிருக்கும் வன்னி மக்களின் மீது அக்கறை கொள்ளுங்கள்.

3. நல்லூர் சங்கிலி மன்னன் அரண்மனை தமிழ் மக்களின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்று. அதன் தற்போதைய நிலை கவலைக்குரியது. அதனை சுற்றுமதிலமைத்துபாதுகாப்புத் தாருங்கள்.

4. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலையாகும் வரை அவர்களின் குடும்ப நிலையறிந்து அவர்களின் நலன் குறித்து உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள்.

5. நீதியரசர் விக்கினேஸ்வரன் ஐயா அவர்கள் தமிழ் மக்களின் அரும் பொக்கிஷம். அவர் முதலமைச்சராக இருப்பது நமது வரப்பிரசாதம். தயவு செய்து அவரை மன உளைச்சலுக்கு ஆளாக்காதீர்கள் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே மேற்படி அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது.

குறித்த நபரை வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர்கள் நேரில் சென்று உண்ணாவிரதத்தை கைவிடும்படி கோரிக்கை விடுத்திருந்தும் அவர் உண்ணாவிரதத்தை தொடர்ந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# 'நிகழ்காலக் கண்ணீர்' கவிதை நூல் வெளியீடு

சாந்தையூர் வீ.வினிஸின் "நிகழ்காலக்கண்ணீர்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.தமிழ்.எவ்.எம் அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசியுரையினை கொக்குவில் மஞ்சவனப்பதி சுப்பிரமணிய குருக்கள் நிகழ்த்தவுள்ளார். நூல் வெளியீட்டுரையினை சைவப் புலவர் பா.திலகானந்தம் வழங்கவுள்ளதுடன் ஆய்வுரைகளை வலிகாமக் கல்வி வலய (தமிழ்) சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ம.பா.மகாலிங்கசிவம் வழங்கவுள்ளார். (இ-5)

# தைப்பூச விழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் தைப்பூச விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலயத்திற்கு வருகைதரவுள்ள அடியார்களது நலன் கருதி போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில்

# தைப்பூச வழிபாட்டுக்கு செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி

வலிகாமம் வடக்கில் உள்ள வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் தைப்பூச வழிபாடு நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத்தன்று சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு விசேட நிகழ்வாக அன்னதானமும் இடம்பெறும்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் மக்கள் மீளச் செல்ல முடியாத நிலையிலேயே கடந்த வருடம் ஜூன் மாதம் கிராம மக்களின் முயற்சியால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று வைகாசி விசாக பொங்கல் மடை சிறப்பாக கொண்டாடி வழிபட்டு மகிழ்ந்தனர்.

இந்நிலையில் இந்தப் பிரதேச மக்கள் இம்முறை தைப்பூச திருவிழாவை சிறப்பாக கொண்டாடவிருக்கின்றனர். இதற்கான அனு மதியை மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களிடம்இருந்து பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வயாவிளான் கிராமம் சிறுசிறு பகுதிகளாக ஆங்காங்கே விடுவிக்கப்பட்டிருந்தாலும் அவை விவசாய நிலங்களாகும். இக்கிராமம் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டியே இம்மாதிரியான முயற்சியில் இக்கிராம மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் காங்கேசன்துறை தெற்கு, பளை வீமன்காமம் வடக்கு, தையிட்டி தெற்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கும் 213.5 ஏக்கர் காணிகளும் பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கும் 255 ஏக்கர் காணிகளும் (மொத்தமாக 468.5 ஏக்கர்), கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் வளலாயில் 233 ஏக்கர் காணிகளுமாக மொத்தப் பரப்பளவு 701.5 ஏக்கர் மீள்குடியேற்றப் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டன.

இது தவிர 13.11.2015 இல் 18.04 ஏக்கர் பொதுமக்களுடைய காணி மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. இதில் ஒட்டகப்புலம் றோ.க.வித்தியாசாலை, சாந்தை சந்தி, வறுத்தலைவிளான் இணைப்பு வீதி, சாந்தை சந்தி 1.81 ஏக்கர் காணி வறுத்தலை விளான் (வீட்டுத் திட்டம்) 11.01 ஏக்கர் காணி, ஒட்டகப்புலம் றோ.க.வித்தியாசாலை 1.05 ஏக்கர் காணி, வயாவிளான் கிழக்கு ஜே/244 பகுதியில் 3.63 ஏக்கர் காணி உள்ளடங்கும். வயாவிளான் கிழக்கு பகுதி 20.3.2015 அன்று விடுவிக்கப்பட்டது.

தைப்பூச வழிபாட்டிற்கான சகல வேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள நிலையில் ஆலயத்தில் குடிநீர் வசதி, மலசலகூட வசதி என்பவற்றுடன் முதலுதவிக்கான அவசரதேவை, வாகன வசதிகளும் வருகை தருவோர்களுக்கான தேநீர் வழங்கலுக்குமான ஏற்பாடுகள் படையினரால் செய்யப்படவுள்ளது. இம்முறை புலம்பெயர்ந்து வாழும் மக்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

எனவே வயாவிளான் மத்திய கல்லூரிக்கு முன்பாக காலை 8 மணிக்கு ஒன்று கூடுமாறும் அங்கிருந்து பேருந்து மூலம் அழைத்துச் செல்லப்படுவார்கள் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ

Schweizerishe Eidgenossenschaft
Confederation Suisse
Confederazione Svizzera
Confederaziun Svizra

Swiss Angency for development and cooperation SDC
Swiss Cooperation Programme office Jaffna

# INVITATION FOR THE SALE OF FOLLOWING USED ITEMS- SDC JAFFNA

1. The Head of Programme Office, Swiss Agency for Development and Cooperation, Jaffna invites sealed bids for the sale of the under mentioned used items belonging to the SDC Jaffna Programme.

2. The list of items are as follows:

| No | Description |
|---|---|
| 01 | 2 Nos HERO PLEASURE Motor Cycles |
| 02 | 4 Nos HERO HONDA Super Splendor Motor Cycle |
| 03 | 1 Nos HERO XLR 125 Motor Cycle |
| 04 | Solar Panel System – 6 pcs/450W. Set including Sine Wave Inverter 24V/1200W, 2 sealed |
| 05 | Batteries Andrid, SWG121500. |
| 06 | 60W Solar Panel System with 350W Inverter and sealed Battery. |
| 07 | Water Pump, Robin 35 – EY 20, Jinasena |
| 08 | Generator – KIPOR, 5 KV – KIPOR, 5 KVA |
| 09 | Generator – HONDA, Portable, EBK 2000 |
| 10 | Generator – FG Wilson, 16.5 KVA |

3. Items could be inspected only during the office hours (8:00 AM – 04:00 PM) from 25.01.2016 to 28.01.2016 at SDC Jaffna Office, 18/10, Wyman Road, Jaffna.

4. One tender should carry only one bid. Any bidder violating the above conditions will be rejected.

5. Completed sealed bids should be deposited to the tender box kept at the same address on or before the 28.01.2016 before 04:00 PM. The price offer must be indicated in Sri Lanka Rupees Only.

6. Opening of bids will be held on 29.01.2016 at 09:00 AM and the selected bidders will be notified on the same day. Bidder or the representatives of the bidder could be present at the bids opening meeting and we strongly encourage the presence.

7. The bidder has to accept that the items will be sold in its current conditions and that SDC has no further obligations to supply spare parts or provide any after-sale repairs or maintenances. SDC reserve the right to make the final decision to select the bidder and is entitled to cancel partially or fully the entire sales procedures at any time with or without giving any reasons.

8. The selected bidder should confirm their interest within 1 day after receiving the information's from SDC and the full payment has to be made before 03.02.2016. The ownership transfer could be done only in the name of the selected bidder, no exception will be given. The buyer should be responsible for changing the ownership, transfer fees related to the motor cycles.

9. Regarding the motor cycles, the buyer has to submit the new registr ation book and should remove the motor cycle from the SDC premises before 03.02.2016. The Motor cycle will not be released from the premises without the presenting a copy of transferred registration book for reference and return.

10. One bidder gets one motorcycle only and in case one bidder submitted highest bids for more than one motorbike, the bidder has to go for the highest bid.

11. The buyer should be responsible for removal and transport of the items from the SDC Office.

Head of the Programme Office
Swiss Agency for Development and Cooperation (SDC)
Swiss Cooperation Programme Office Jaffna, 18/10, Wyman Road, Jaffna. 22.01.2016

(சி-3513)


# தைப்பூச திருவிழாவும் மஞ்சப் பெருவிழாவும்

இணுவில் கந்தசுவாமி கோவிலில் தைப் பூசத்திருவிழாவும் மஞ்ச பெருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இத் திருவிழாவுக்கு யாழ்.குடாநாடடின் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஒவ்வொரு வருடமும் திரள்வது வழக்கம்.

இதன் காரணமாக அடியார்களது வசதி கருதி பாதுகாப்பு வசதிகள், குடிநீர் வசதிகள் போன்றன ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

இவ் ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 19 ஆம் திகதி ஆலய மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இசை நிகழ்ச்சி

இலங்கை கிற்றார் சங்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கிற்றார் கலைஞர்களின் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முற்றிலும் இலவசமாக நடைபெறும் இந் நிகழ்வில் கிற்றார் ரசிகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிற்றார் இசை திருவிழா ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (இ-5)


யாரிடம் பேசுவது?

நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது.
நான் என்ன செய்வது?
என்று எண்ணுகின்றீர்களா ......

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
திங்கள் முதல் வெள்ளி வரை மு.ப 9.00 முதல் பி.ப 1.00 வரை
சனி, ஞாயிறு தினங்களில் மு.ப 9.00 முதல் பி.ப 5.00 வரை
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
• மதசார்பற்றது • ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
(3363) Sponsored by Enlightenment Circle, UK



# பனை வளர்ப்போர் சங்கம்

## இலங்கை பனை அபிவிருத்திச் சபை

பனைப்பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல், பாதுகாத்தல், மற்றும் பனைவள பயன்பாட்டை மேம்படுத்தல் போன்ற நோக்குடன் இலங்கை பனை அபிவிருத்திச் சபையினால் "பனைவளர்ப்போர் சங்கம்" எனும் அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

இவ்வமைப்பானது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1975 ஆம் ஆண்டு 24ம் இல தெங்கு அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டின் 46ம் இலக்க தெங்கு அபிவிருத்தி திருத்தச் சட்டத்தின் 2(1) ம் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் (1) சிறப்புத்தத்துவத்திற் கமைய பனை அபிவிருத்திச் சபையினால் பதிவு செய்யப்பட உள்ளது.

04 பரப்புக்கு (1/4 ஏக்கர்) மேல் அல்லது 10 பனைமரங்களுக்கு மேல் உள்ள பனங்காணியை உடையவர்கள்/பனை செய்கையில் ஈடுபடுபவர்கள் இவ்வமைப்பில் அங்கத்தவர்களாக இணைய முடியும்.

**அங்கத்துவம் பெறுவதால் கிடைக்கும் அனுகூலங்கள்:-**

- பனந்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் மூலப் பொருட்களை சரியான முறையில் பயன் படுத்தி வருமானம் ஈட்டக்கூடிய வழிகள் தொடர்பான ஆலோசனைகள், பயிற்சிகள்
- உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
- உற்பத்தியாளர்களை/ பயிர்ச்செய்கையாளர்களை இனங்கண்டு கொள்ளல்
- பனந்தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி சாத்தியமான தீர்வுகளை எட்டுதல்
- பாவனையின்றி இருக்கும் பனை வளத்தினை உற்பத்தி திறனுடையதாக மாற்றுவதுடன் அதனுடனிணைந்து மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல்

இவ்வமைப்பில் இணைய விரும்புபவர்கள் பனை அபிவிருத்திச்சபையின் மாவட்ட அலுவலர்களில் அல்லது தலைமையலுவலகத்தில் விநியோகிக்கப்படும் அங்கத்தவர் விண்ணப்பப்படிவத்தினை ரூபா 10 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி நேரிலோ/தபாலிலோ முகாமையாளர் (அபிவிருத்தி), பனை அபிவிருத்தி சபை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைத்து அங்கத்தவராக இணைந்து கொள்ள முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள பனை அபிவிருத்திச் சபை அபிவிருத்திப்பிரிவுடன் தொடர்பு கொள்ள முடியும்.

(தொடர்புகளுக்கு:-021 222 2034)

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(சி-3515)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் செல்வி சின்னத்துரை திலகவதி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 25 |
| 08 | 12 |
| 1954 | 2015 |

கடந்த 25.12.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது பாசமிகு சகோதரி திலகவதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது சகல வழிகளிலும் சேவையாற்றி உதவிய அனைத்து வைத்தியர்கள், ஆண், பெண் தாதியர்கள், சிற்றூழியர்கள் அன்னவருக்கும், மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டும் சரீர உதவிகள், பிற உதவிகள் புரிந்த அனைத்துள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை மீண்டுமொரு முறை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 24.01.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரினது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பினை அனைவரும் தயவு கூர்ந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்.

A9 வீதி,
"விஸ்ணு மகால்",
வண்ணாங்கேணி, பளை.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்.

(3360)

# “பாதுகாப்பான பாடசாலைகள்” போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம்

(மல்லாவி)

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளில் GIZ/EST நிறுவனத்தின் முன்னோடி பாடசாலைகள் 60இற்கு இடையில் கடந்த 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட “பாதுகாப்பான பாடசாலை” போட்டியில் வலய மற்றும் மாகாண மட்டங்களில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்களை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். இதற்கமைய வலயமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விப ரங்கள் வருமாறு,

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் மு/மல்லாவி மத்திய கல்லூரி,மு/ஐயங்கன்குளம் அ.த.க.பாடசாலை,மு/மாங்குளம் மகா வித்தியாலயம் ,முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்,மு/குமுழமுனை மகா வித்தியாலயம்,மு/செம்மலை மகா வித்தியாலயம்,கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்,கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலை,கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம் , வவுனியா கல்வி வலயத்தின் கீழ் வவு/நொச்சிமோட்டை ஜே.எஸ்.வி.பாடசாலை,வவு/புளியங்குளம் இந்துக்கல்லூரி,வவு/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்,தீவக கல்வி வலயத்தின் கீழ் யாழ்/வேலணை சரஸ்வதி வித்தியாலயம், யாழ்/மண்டைதீவு மகா வித்தியாலயம்,யாழ்/நாரந்தனை றோ.க.மகா வித்தியாலயம், மடுக் கல்வி வலயத்தின் கீழ் மன்/மூன்றாம் பிட்டி அ.த.க.பாடசாலை,மன்/இலுப்பக் கடை மகா வித்தியாலயம்,மன்/தூய யேசுவாய் மகாவித்தியாலயம்ஆகியபாடசாலைகள் வெற்றி ஈட்டியுள்ளன.

மாகாண மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களில் வவு/நொச்சிமோட்டை ஜே.எஸ்.வி பாடசாலை,யாழ்/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்,வவு/புளியங்குளம் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகள் வெற்றியீட்டியுள்ளன.


வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கான பரிசில்கள்,சான்றிதழ்கள் வலய அனர்த்த பாதுகாப்பு கல்வி இணைப்பாளர் ஊடாக வலய மட்டத்தில் நடைபெறவுள்ள அதிபர் களுக்கான கூட்டத்தில் வைத்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை மறுதினம் 25ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவர்களின் தலைமையில் நடைபெற வுள்ளது.இக்கூட்டத்திற்கு கிராம அமைப் புக்களிலுள்ள தீர்மானம் எடுக்கக் கூடிய ஒரு பிரதிநிதி பங்குபற்றி தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கியுதவுமாறு கரைச்சி பிரதேச செயலர் பிரதேச அமைப்புகளுக்கு கடிதம் மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார். (2-254)




## வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டபோதும் குடிநீர் கிணறு இன்றி மக்கள் அவதி



அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு தன்னார் வத் தொண்டு நிறுவனங்களோ அல்லது பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர் களோ தமக்கு ஒரு கிணற்றை யாவது அமைத்து வழங்கினால் தமது தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்ய முடியு மென வும் அவர்கள் தெரிவிக் கின்றனர்.

(வற்றாப்பளை)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை மத்தி கிராம அலுவலர் பிரிவில் புதிதாக காணிகள் வழங்கப்பட்டு யு.என்.ஹபிராட் நிறுவனத்தினால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட சுமார் 30 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் கிணறுகள் இன்றி பெரும் அல்லற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது குடிநீர் தேவைக்கு கூட ஐயனார் குடியிருப்பு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுக்கிணற்றை குடிநீர் தேவைக்கு நாடிச் செல்வதாகவும் ஏனைய தேவைகளுக்கு பணத்தை செலுத்தி நீரைப் பெறுவதாகவும்

அதேவேளை புதி தாக அமைக்கப்பட் டுள்ள இக்குடியிருப்பு பகுதியில் நான்கு ஒழுங்கைகள் காணப்படுவதாகவும் ஒழுங்கைக்கு ஒரு கிணறு வீதம் அமைத்து தருவோம் என தேர்தல் காலங்களில் பல்வேறு அரசியல் வாதிகளால் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் இது வரையில் ஒரு கிணறு இன்றி தாம் இருப்பதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள எமக்கு ஒரு கிணற்றையேனும் அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருகின்றனர். (2-310)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை


Oferr (Ceylon) அனுசரணையுடன் பதிவாளர் நாயகம் திணைக்களமும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9மணியளவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

எனவே தங்களின் தொலைந்த பிறப்பு, இறப்பு,விவாகச் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் பெற்றுக்கொள்வதோடு இதுவரை பதியப்படாத பிறப்பு,இறப்பு மற்றும் விவாக பதிவுகளையும் மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் முதியோர் அடையாள அட்டை சம்பந்தமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படும். இச்சந்தர்ப்பத்தை தவறவிடாது அனைத்து மக்களையும் இந்நடமாடும் சேவை மூலம் பயன்பெறுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (2)



கிளிநொச்சிப் பகுதியிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றி வரும் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிலையம் தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தை கடந்த 17ஆம் திகதி திறந்து வைத்தது.இந்நிகழ்வின் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இயங்கும் ஏழு விஞ்ஞான கல்வி நிலையங்களுக்கும் ஒவ்வொரு மடிக்கணனி வீதம் இலவசமாக வழங்கப்பட்டது.இவற்றை அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் த.சத்தியமூர்த்தி வழங்கி வைத்தார். (படம்:-உருத்திரபுரம் செய்தியாளர்)



ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கலைமகள் முன்பள்ளியில் தைத்திருநாள் நிகழ்வை சிறார்களுக்கு கற்பிக்கும் முகமாக தைப்பொங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது..... (படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

## முழுநிலா நாள் கலை விழா-2016 இன்று வவுனியாவில் நடைபெறும்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் “முழுநிலா நாள்” கலை விழா -2016 இற்கான முதல் நிகழ்வு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கலைநிகழ்வுகள் வரிசையில் வடக்குமாகாண கல்வி திணைக்களத்தின் கீழுள்ள கல்வி வலயங்களில் உள்ள ஆசிரியர்கள்,மாணவர்கள் பங்கேற்கும் இயல்,இசை,நாடகம் என்பன உள்ளடங்கிய முத்தமிழ் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (2-15)

## இருபாலங்களை நிலமட்டத்திலிருந்து மேலுயர்த்தி நிர்மாணித்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை



(மாமூலை)

முல்லைத்தீவு,ஒட்டுசுட்டான் பிரதேச எல்லைக்குட்பட்ட கற்சிலைமடு பண்டாரவன்னி கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியில் காணப்படும் இருபாலங்கள் இரண்டையும் நிலமட்டத்திலிருந்து மேலாக உயர்த்தி நிர்மாணித்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு பாலங்களும் நிலமட்டத்திற்கு கீழ் அமைக்கப்பட்டுள்ளமையால்,மழைகாலங்களில்சுமார் 6அடி உயரம் வரை வெள்ளநீர் வாரடித்துப் பாய்வதால் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு வருகின்றது.

கடந்தடிசெம்பர்மாதம்பெய்த கனமழையினால் இக்கிராம மக்களின் வீடுகளினுள் சுமார் 3அடிவரை வெள்ளநீர் புகுந்தமையால் மக்கள் அங்கிருந்து வெளியேறமுடியாத நிலை காணப்பட்டது.

பாலங்களின் ஊடாக போக்குவரத்து செய்ய முடியாமையே காரணமாகும்.

எனவே இந்த இரண்டு பாலங்களையும் நிலமட்டத்திற்கு மேல் உயர்த்தி போக்குவரத்திற்கு உகந்த பாலங்களாக நிர்மாணித்து த் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே காலம் தாழ்த்தாது குறித்த பாலங்களை நிலமட்டத்திற்கு மேல் உயர்த்தி சீராக செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-301)

### மனிதவள முகாமையாளரின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து

# கிளிநொச்சி "வானவில்" ஆடைத்தொழிற்சாலை பணியாளர்கள் வீதியில் இறங்கி போராட்டம்



(கிளிநொச்சி-1)

**கிளிநொச்சி அறிவியல் நகரில் இயங்கும் தனியார் ஆடைத்தொழிற்சாலையான வானவில் நிறுவனத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இந் நிறுவனத்தில் மனிதவள முகாமையாளராக பணிபுரிந்த அதிகாரி காரணங்கள் எதுவுமின்றி இடமாற்றம் செய்யப்பட்டமையை எதிர்த்தே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த மனிதவள முகாமையாளர் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் இருந்து பணிபுரிந்து வருவதுடன் அனைத்து பணியாளர்களுடனும் சிறந்த முறையில் பணியாற்றி வந்துள்ளார்.

இந் நிறுவனத்தில் 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட பெண் பணியாளர்களும் 500 மேற்பட்ட ஆண் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இப் பணியாளர்களின் நலன்களில் கூடிய கரிசனையும் ஈடுபாடும் உடையவராக அவர் செயற்பட்டு வந்ததாக பணியாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த முகாமையாளரின் இடம் மாற்றம் தொடர்பாக தம்மிடம் கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்படவில்லையெனவும் தமக்கு மேற்படி நபரே மனித வள முகாமையாளராக பணிபுரிய வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

இவ் விடயம் தொடர்பாக நிறுவனத்தின் உயரதிகாரிகளிடம் தொடர்பு கொள்ள முற்பட்ட வேளை எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க முன்வரவில்லை. (2-277-271)

## கஞ்சா பொதிகளுடன் இளைஞன் கைது

### மன்னாரில் சம்பவம்



பல இலட்சம் ரூபாய் பெறுமதியான கஞ்சாப் பொதிகளுடன் மன்னார் பாலியாற்றுப் பகுதியில் வைத்து நேற்று அதிகாலை இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட விசேட போதை வஸ்து குற்றத் தடுப்பு பிரிவின் உபபொலிஸ் பரிசோதகர் எச்.எம். யூ.ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவ தாவது, மன்னார் மாவட்ட விசேட போதை வஸ்து குற்றத்தடுப்பு பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.எ.எம்.விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக உப பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.யூ. ஹேரத் தலைமையில் ஒன்பது பேர் அடங்கிய பொலிஸ் குழுவினர் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் பாலியாற்று பிரதான வீதியில் வைத்து மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த நபரை மடக்கிப்பிடித்துள்ளனர்.

குறித்த நபரிடம் இரண்டு கஞ்சாப் பொதிகள் காணப்பட்டதாக்வும் அவை 4 கிலோ 160 கிராம் எடை கொண்ட பல இலட்சம் ரூபாய் பெறுமதியானவை எனவும் மன்னார் மாவட்ட விசேட போதை வஸ்து குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபர் தற்போது மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் விசாரணைகளின் பின் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட விசேட போதை வஸ்து குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (2-281)

## முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் புத்தாக்க, சமையல் கலை போட்டிகள்

மு/முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் புத்தாக்க நிகழ்வும் சமையல் கலைப் போட்டியும் கடந்த 18 ஆம் திகதி மேற்படி பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதில் தரம் 9 மாணவர்கள் ஒரு தொகுதியாகவும் தரம் 13 மாணவர்கள் ஒரு தொகுதியாகவும் மொத்தம் 27 குழுக்கள் பங்கேற்று இருந்தன.

அதிபர்தனதுதலைமையுரையில், தொழிற்கற்கை முறை முதன் முறையாக இப்பாடசாலையில்தான் நடைபெற்றுள்ளது என தெரிவித்தார்.




இதன்படி தரம் ஒன்பதுக்குரிய குழுவினரில் முதலாமிடம் முட்டை பீசா செய்த குழுவினரும் இரண்டாமிடத்தை வாழைப்பூ கறி செய்த குழுவினரும் மூன்றாம் இடத்தை பேஸ்ரி செல் செய்த குழுவினரும் முறையே பெற்றுக் கொண்டனர்.

தரம் 13 இல் முதலாமிடம் சிக்கன் லெவல் நூடில்ஸ் செய்த குழுவினரும் இரண்டாமிடத்தை சொக்லேட் செய்த குழுவினரும் மூன்றாமிடத்தை சிக்கன் பிரியாணி, இட்லி பிரியாணி செய்த இரு குழுவினரும் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியில் குத்தாட்ட, சமையல் கலைப் போட்டிகள் என்ற தலைப்பில் நேற்றைய வலம்புரியில் வெளியான செய்தியில் குத்தாட்ட என்ற சொல்லை புத்தாக்க என்று திருத்தி வாசிக்கவும். (2-292)

## வீட்டில் இருந்தவர்கள் இரத்த வெள்ளத்தில்; பல லட்சம் ரூபா நகைகள்,பணம் கொள்ளை

### மன்னார் எழுத்தூரில் நேற்று அதிகாலை திகில் சம்பவம்



வீட்டின் கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை கண்மூடித்தனமாகத் தாக்கிவிட்டு பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக உரிமையாளரினால் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மன்னார் எழுத்தூரில் நடைபெற்றுள்ளது.

மன்னார் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த முருங்கன் பாடசாலை ஆசிரியர் வீட்டிலேயே சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும்தெரிய வருகையில், ஆசிரியர் அவருடைய மனைவி, தந்தை மற்றும் மூன்று பிள்ளைகள் ஆழ்ந்த நித்திரையிலிருந்த வேளை வீட்டின் பின்புறமாக திருடர்கள் கூரைமீது ஏறி ஓடுகளை அகற்றி உள்ளே நுழைந்துள்ளனர்.

இவர்களில் இருவர் முகத்தை துணியினால் மறைத்தவாறும், மற்றையவர் முகத்திற்கு எதுவும் கட்டாதவாறும் சென்றுள்ளனர்.

வீட்டினுள் நுழைந்த திருடர்கள் ஆழ்ந்த நித்தி ரையில் காணப்பட்ட ஆசிரியர், அவரது தந்தை, மனைவி ஆகியோர் மீது தடிகளினால் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர். இதன்போது ஆசிரியரின் தந்தையை கண்மூடித்தனமாக தாக்கியதிருடர்கள் அவரை கட்டிலில் கட்டி வைத்த பின்னர் கணவன், மனைவி ஆகிய இருவரையும் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளனர்.

மேலும்அவர்களை அச்சுறுத்தி அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்ததோடு பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர். ஆனால் இதன்போது 3 பிள்ளைகளுக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

திருடர்கள் தப்பிச் சென்ற நிலையில் காயமடைந்த ஆசிரியர் அபாயக் குரல் எழுப்பவே அயலவர்கள் குறித்த வீட்டிற்குச்சென்ற போது இரத்த வெள்ளத்தில் காணப்பட்ட மூவரையும் மீட்டு மன்னார்பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். இவர்கள் தலை மற்றும் உடற்பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.


மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரும் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக ஆசிரியரின் மனைவி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தடயங்களை பார்வையிட்டதோடு மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

குறித்த சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.


இதன்போது ஆசிரியரான நிவீன் பெனாண்டோ, அவரது மனைவியான ஆசிரியர் நி. இதயமலர், ஆசிரியரின் தந்தையான அலசியஸ் பெனாண்டோ ஆகியோரே படு காயமடைந்தவர்களாவர். (2-281)

# சுகாதாரத்தைப் பேணுவதன்மூலம் வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்

## பொது வைத்திய நிபுணர் கேதீஸ்வரன் அறிவுரை



யாழ்.மாவட்டத்தில் வளர்ந்தவர்களிடையே தற்போது அதிகரித்துவரும் வயிற்றோட்ட நோயை சுகாதாரத்தைப்பேணுவதன்மூலமே தவிர்க்கமுடியும்எனயாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய



நிபுணர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வயிற்றோட்ட நோய் (Diarrhea) அதிகரித்து வருகின்றது.

தினந்தோறும் பல நோயாளர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சடுதியாக அதிகரித்துள்ள இந்த நோய் தொடர்பாக அவருடன் மேற்கொண்டநேர்காணலின்போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**வயிற்றோட்டம் யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கக் காரணம் என்ன?**

இப்போது மூலைக்கு மூலை புதிய உணவகங்கள் (Restaurants) சாப்பாட்டுக்கடைகள் முளைக்கின்றன. எல்லோருக்கும் கடைச்சாப்பாடு ஒரு நாகரிகமாக (Fashion) ஆகிவிட்டது. வேலைப்பழு காரணமாகவும் கணவன்-மனைவி இருவரும் வேலை செய்யும் வீடுகளிலும் கடைச்சாப்பாடு தவிர்க்க முடியாத விடயமாகிவிட்டது. இதைவிட மாலை வேளையில் ரோல்ஸ், வடை என பல காரங்களைவாங்கிஉண்கின்றோம்.

இந்த உணவகங்க ளில் உரிய சுகாதார விதிமுறை கள் கவனிக்கப்படுகின்றனவா என்பது கேள்விக்குறியே. உணவகங்களில் மட்டுமன்றி அன்னதானங் களிலும் உரிய சுகாதார விதி முறை கள் கடைப்பிடிக்கப்படாததனால் வயிற்றோட்டம் பலருக்குஏற்பட இடமுண்டு.

வீடுகளிலும் உணவு தயாரிப்பு, சேமிப்பு, பரிமாறுதல் மற்றும் உண்ணும்போது சுகாதார விதி முறைகள் கடைப்பிடிக்கப்படாத விடத்து பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம்.

வைத்திய ஆலோசனையின்றி நோய்க்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவதனாலும் வயிற்றோட்டம் ஏற்படலாம். (Antibiotics)

**வயிற்றோட்டத்தின் அறிகுறிகள் என்ன?**

நீர்த்தன்மையாக அல்லது இளக்கமாக 3 அல்லது 3 தடவைக்கு மேல் (ஒரு நாளைக்கு) மலம் வெளியேறு தல் வயிற்றோட்டம் எனப்படும். பொது வாக 2-3 நாட்களில் இது குணம டைந்துவிடும்.

சாதாரணமாக கிருமித்தாக்கத்தினால் ஏற்படும் வயிற்றோட்டம் 2 கிழமைகளுக்குமேல் நீடிப்பதி ல்லை. ஒருவருக்கு 2 கிழமைகளுக்கு மேல் வயிற்றோட்டம் இருந்தால் அதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. குடல் அலர்சி நோய், குடல் புற்றுநோய், அதிக தைரொக்சின் சுரப்பு போன்ற காரணங்கள் இருக்கக் கூடும். எனவே இவ்வாறான நோயுடையவர்கள் விசேட வைத்திய நிபுணரைச் சந்திப்பது நல்லது.

வயிற்றோட்டம் பெரும்பாலும் வைரஸ்களால்ஏற்படுகின்றது. ஆனால் சிலவேளைகளில் பக்றீரியா, அமீபா போன்ற ஒரு கல உயிர்களாலும் ஏற்படலாம்.

வயிற்றோட்டத்தின்போது பொதுவாக மலம் நீர்த்தன்மையாக (Watrey) வெளியேறும். சிலவேளைகளில் இரத்தம், சீதம் என்பன வெளியேறலாம். வயிற்றுநோ, வாந்தி என்பனவும் ஏற்படலாம். சிலருக்கு காய்ச்சல் ஏற்படலாம்.

**வயிற்றோட்டத்தினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் என்ன?**

வயிற்றோட்டத்தினால் ஏற்படக் கூடிய மிகப்பெரிய ஆபத்து உடலிலுள்ள நீரும் கனிப்பொருட்களும் வெளியேறுவதால் ஏற்படும் வறட்சித்தன்மை (Dehydration ஆகும். இதனால் உயிராபத்தும் ஏற்பட லாம். இதன் அறிகுறிகளாவன, அதிக தாகம், சிறுநீர் குறைவாக வெளி யேறுதல், கண்கள்தாழ்ந்து இருத்தல், தோல், வாய் என்பன வறண்டிருத்தல் என்பனவாகும்.

இதைவிட வயிற்றோட்டத்தை ஏற்படுத்தும் கிருமிகள் இரத்தத்தில் பரவி செப்டிசீமியா எனும் நிலையை ஏற்படுத்தலாம். சிலவேளைகளில் குடல் பருத்து வயிறு வீக்கமடையும் தன்மை ஏற்படலாம். சில சமயம் சீறுநீரகத் தாக்கமும் ஏற்படலாம்.


**வயிற்றோட்டத்தை தடுக்க மேற்கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள் எவை?**

கூடுமானவரை கடைகளில் விற்கப்படும் உணவு வகைகளை குறிப்பாக ஐஸ்கிறீம் போன்ற குளிரான உணவுகளைத்தவிருங்கள். உணவை நன்கு கழுவி நன்கு சமைத்து உண்ணுங்கள். உணவை ஈ, கரப்பான் போன்றவை தீண்டாமல் மூடி வையுங்கள். சமைத்த உணவை நீண்ட நேரம் வைத்தாலும் அதில் கிருமிகள் நச்சுத் தன்மையை ஏற்படுத்தலாம்.

உணவை உண்ணும் முன்பும் மலசலகூடத்திற்குச் சென்ற பின்பும் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள். அல்ககோல் உள்ள கைகளை சுத்தப்படுத்தும் திரவங்கள் போதுமானவை அல்ல. அவை வைரஸ்களைக் கொல்வதில்லை.

எப்போதும் கொதித்தாறிய அல்லது வடிகட்டிய நீரை அருந்துங்கள். குளிர்சாதனப் பெட்டியில் வைப்பதால் ஒருபோதும் கிருமிகள் அழிவதில்லை. எனவே ஐஸ்கிறீம் தயாரிப்பதானால் கொதித்தாறிய நீரி லேயே தயாரிக்கவேண்டும். மலக்கழிவு கள் முறையாக அகற்றப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முறையான



கழிவகற்றும் வடிகால்கள் (Sewage System) இல்லை என்பது ஒரு பெரிய குறைபாடாகும். கிணறுகள் மலசலக்குழியிலிருந்து ஆகக்குறைந்தது 30 அடி உயரத்தில் இருக்க வேண்டும்.

உணவு தயாரிப்பவர்களும் பரிமாறுபவர்களும் தொற்று நோயுள்ளவர்களாக இருக்கக்கூடாது.

**வயிற்றோட்டம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

உடலிலிருந்துவெளியேறும்நீரை ஈடுசெய்வதே மிகப் பிரதானமாகும். (Rehydration) வயிற்றோட்டம் ஏற்படும் போது உப்பும் (Nacl) குளுக்கோஸ்அல்லதுசீனிசேர்த்தநீரே சிறப்பாக அகத்து றிஞ்சப்படுகிறது.

அத்துடன் வயிற்றோட்டத்தின் போது பெருமளவு பொட்டாசியம் உடலிலிருந்து இழக்கப்படுகின்றது. இதனையும் ஈடு செய்ய வேண்டும்.

வயிற்றோட்டத்தின் போது பயன்படுத்த வேண்டிய நீராகாரம் Oral Rehydration Solutran (ORS) எனப்படுகின்றது. இது கடைகளில் (Jeevani) ஜீவனி என்ற பெயரில் விற்கப்படுகிறது.

ஒவ்வொரு முறையும் வயிற்றோட்டம் ஏற்படும் போது 200 ml Jeevani பருகுங்கள்.

இதைவிட சூப், உப்பும் சீனியும் சேர்த்த பழச்சாறு, கஞ்சி, நெல்லுப் பொறித் தண்ணீர் போன்றவற்றை அதிகமாகப் பருகவேண்டும்.


**வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகளைப் பயன்படுத்தலாமா? (Anti diarrheals)**

வைத்தியரின்ஆலோசனையின்றி இவற்றைப் பயன்படுத்துவது ஆபத்தானது. இவற்றினால் கிருமிகள் தேங்கி உடல் முழுவதும் பரவ வாய்ப்புள்ளது. (Sepsis) அத்துடன் குடல் வீக்கம் போன்ற பிரச்சினைகளும் ஏற்படலாம்.

**கிருமிகொல்லி மருந்துகளை (Antibiotics) எப்போது பயன்படுத்த வேண்டும்?**

உங்களுடைய வைத்தியர் அதனைத் தீர்மானிப்பார். பொதுவாக வைரஸ்களால் ஏற்படும் மற்றும் நுண்ணுயிர்கள் வெளிவிடும் நச்சுப்பதார்த்தங்களால் (Toxins) ஏற்படும் வயிற்றோட்டங்களுக்கு Antibiotics தேவையில்லை.

காய்ச்சல், இரத்தம் சீதம் வெளியேறல், வயது போனவர்களில் ஏற்படும் வயிற்றோட்டத்திற்கு Antibi-



otics தேவைப்படலாம்.

**எத்தகைய நோயாளிகளை வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும்?**

வாந்தி ஏற்பட்டவர்கள் வாய் மூலம் நீராகாரங்களை எடுக்க முடியாததால் சேலைன் ஏற்றுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டி ஏற்படுகின்றது. அதிக நீரிழப்பு ஏற்பட் டவர்களுக்கும் சேலைன் ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

**வயிற்றோட்டம் உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய உணவுகள் எவை?**

பாலும் பாற்பொருட்களும் வயிற்றோட்டம் உள்ளபோதும் அதன் பின் சில நாட்களுக்கும் தவிர்க்க வேண்டும். இதன்காரணம் வயிற்றோட்டம் உள்ள ஒருவருக்கு பாலிலுள்ள வெல்லமான Lactosen சமிபாடடையச் செய்யும் நொதியம் குறைவடைகின்றது. எனவே பால் வயிற்றோட்டத்தை அதிகரிக்கச் செய்யும்.

தேநீர், கோப்பி, கோலா போன்றவற்றில் உள்ள Caffeine குடலை அதிகமாகச் சுருங்கி விரியச் செய்வதுடன் சுரப்பையும் கூட்டுகின்றது. எனவே வயிற்றோட்டம் அதிகரிக்கலாம்.

**ORS ஐ வீட்டில் தயாரிக்க முடியுமா?**

ஆம் அரைத்தேக்கரண்டி உப்பு, ஒரு தேக்கரண்டி அப்பச் சோடா ($NaHCO_3$), 8 தேக்கரண்டி சீனி, 8 அவுன்ஸ் தேசிக்காய் சாறு (Kcl) சேர்த்து 1$l$ கொதித்தாறிய நீரில் கலந்தால் ஜீவனி ரெடி. இதை வயிற்றோட்டம் ஏற்படும்போது 200 ml பருகவேண்டும். 24 மணி நேரம் வைத்திருக்க முடியும்.

வயிற்றோட்டம் என்பது தவிர்க்கப்படக் கூடிய ஒரு நோயாகும். சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் இந்த நோயில் இருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

வயிற்றோட்டம் ஏற்பட்டால் ஜீவனி மற்றும் ஏனைய நீராகாரங்களை அதிகம் எடுப்பதன் மூலம் நீரிழப்பை தடுக்கலாம்.

நேர்காணல்: பொ.சோபிகா

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—78

# வீட்டுத்தோட்டத்தை சூழல்தொகுதியாக்கிய உத்தி

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நாம் வாழும் சூழலைப் பற்றி அதிக கரிசனை கொள்ள வேண்டியிருக்கின்றது. வழமையாக சுற்றம் சூழலைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பவர்கள் சூழல்தொகுதியைப் பற்றியும் தெரிந்து கொள்ளவும் அதனாலுண்டான பயனைப் பற்றி தெரிந்து கொள்வதற்காகவும் இக்கட்டுரை உருக்கொண்டது. நாம் வாழும் சூழலென்பது உயிருள்ள மற்றும் உயிரற்ற அதாவது பௌதீக காரணிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். சூழல் தொகுதிக்குள் (Ecosystem) அனைத்தும் அடக்கம் எனலாம். பயிர்ச்செய்கை தனியே விளைநிலத்தில் பயிராகும் குறிப்பிட்ட பயிர்கள் சார்ந்தது மட்டுமல்ல விளைநிலத்தில் அயலிலுள்ள பிரதேசத்தை உள்வாங்கியதாக இத்தொகுதி அடங்குகின்றது. இங்கே சூழல் தொகுதியென்பது குறிப்பிட்ட பரந்துபட்ட பிரதேசத்தை வரையறுத்து அதற்குள் இருக்கின்ற உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகளை உள்வாங்கியதாகும். உயிருள்ள அங்கிகள் என்னும் போது மனிதனுட்பட அனைத்து விலங்குகள், பறவைகள், தாவரங்கள், அங்கிகள், நுண்ணங்கிகள் என்பனவற்றை கருதலாம். உயிரற்ற காரணிகள் எனும் போது அவை குறிப்பாக பௌதீக காரணிகளை கொண்டதாக பலவகைத்தன்மையைக் கொண்டிருக்கும். ஆனால் வேளாண் சூழல் தொகுதி குறிப்பிட்ட உயிரியல் காரணிகளைக் கொண்டிருப்பதால் இதிலுள்ள சமநிலை முன்னையதைப்போல அதற்கு இணையாக இருக்கமாட்டாது. சேனை வளர்ப்பு திட்டத்தை ஆரம்பித்த போது வனமாக இருந்த விளைநிலத்தை பகுதியாக அழித்து பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தியிருந்தோம். சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க வனம் முற்றாக அழிக்கப்பட்டு பயிர்ச்செய்கைப் பிரதேசமாக ளடக்கிய தொகுதியாக வீட்டுத்தோட்டம் அமைய வேண்டும். மரங்கள், பழமரங்கள், தானியப் பயிர்கள், அவரைகள், மரக்கறிப் பயிர்கள், செடிகள், ஏறிகள், தாவிகள், கொடிகள், செடிகள், பூண்டுகள், மூலிகைத்தாவரங்கள், அழகுத்தாவரங்கள் அதிலும் பூக்குந்தாவரங்கள் என பலவாறாக இவை அமையப்பெற்றிருக்கின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது. தாவரங்கள் தவிர்நத வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான மற்றும் பயன்படும் விலங்கினங்கள்பற்றிய அறிவை மக்தில் கொண்டு பல்பயிர் வகைகளை வளர்த்தால் அதிலிருந்து அதிகரித்த பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளலாம். வெறுமனே அழகுத்தாவரங்களை வைத்திருப்பது வீட்டுத்தோட்டமாகாது. அதில் சக்திவெளிப்பாடு இருக்கவேண்டும். எந்த தாவரம் உயிரினங்களைக் கவருகின்றதோ அதற்கு (ஈர்ப்பு) சக்தி அதிகமென்பர். சக்தியின் சுற்றுக்குள் உள்ளார்ந்தால் அந்த வட்டத்திற்குள்ளான சக்திப்பரவலை நாமும் பெறுவோம்.

வீட்டுத்தோட்டத்திற்கு என



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்



ஆரம்பிப்பதை நன்மைக்குரியதாக கருதினால் போருக்குப்பின்னரான காலப்பகுதியில் அநேகமாக இடங்களில் விரக்தி மயப்படுகின்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. காலைப் பொழுதுரம்மியமானதாக இருப்பதில்லை.

எங்கும் இரைச்சலும் சத்தங்களுமாகவே எமது வாழும் பிரதேசம் அமைந்திருக்கின்றது. நல்ல ஒலியை கேட்க முடிவதில்லை. நல்ல காற்று, நல்ல நீர், காதுகளுக்கு சிறப்பான இனிமையான ஒலி என பலவற்றை நாம் இழந்து தவிக்கின்றோம். இயந்திரமயமாக்கி இயந்திரங்களுடன் நாமும் இயந்திரமாகி விட்டதனால் நாம் ஒருபக்கத்தில் பலவற்றை இழந்திருக்கின்றோம். இவ்வாறான

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 75

இருக்கின்றன. அதில் வெப்பநிலை, ஈரப்பதன், கதிர்வீச்சு, கார அமில தன்மை, காற்றின் வேகம், மண்ணின் வகை, மண்ணின் தன்மை என பலவகையான காரணிகளும் உள்ளடங்கியிருக்கும்.

ஒரு சூழல்தொகுதி என கருதும்போது ஒரு கிராமத்திலுள்ள வயற்பரப்பு அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதனால் இதற்கான பரப்பளவை இவ்வளவு என தீமானம் செய்ய முடியாது. இங்கே வன சூழல்தொகுதி மற்றும் வேளாண் சூழல் தொகுதி என்பனவற்றை ஒப்பீடு செய்து பார்த்தால் வனசூழல் தொகுதியில் அனைத்து உயிரியல் காரணிகளும் பௌதீக காரணிகளும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு தொகுதியை சமநிலையில் வைத்திருக்கும். இவ்வாறான சூழல்தொகுதியில் பல்வேறுபட்ட அங்கிகள் காணப்படுவதனால் இது ஒரு மாற்றப்பட்டுள்ளது. இப்போது நகரப்பகுதியில் மட்டுமல்ல பாதையோரங்களில் வர்த்தக ரீதியாக பயிர்ச்செய்கை செய்யமுனைந்த போது இருந்த கொஞ்சநஞ்ச வனங்களையும் குறிப்பாக மரங்களையும் அழித்து கட்டடங்களை எழுப்பியுள்ளார்கள். நல்ல மண்வளத்தைக்கொண்ட நிலத்தை கட்டடங்கள் கட்டுவதற்கு பயன்படுத்த முயலுகின்றார்கள். இந்த அபிவிருத்தி சூழல்தொகுதியில் கணிசமான அளவு மாற்றத்தை ஏற்படுத்தும் நிலைக்கு தள்ளியிருக்கின்றது. இதுவே உண்மை. பாரம்பரியமாக உள்ள மண்ணின் தன்மைக்கு மேலாக சூழல்தொகுதியில் அதிகரித்த மாற்றத்தை விரைந்து செய்ய முடியாது. இந்த மாற்றங்களையும் உள்வாங்கியே சூழல்தொகுதி உயிர்ப்பு பெறுகின்றது.

இந்த அடிப்படையை உள்வாங்கிய எளிமையான தொகுதியாகவே "வீட்டுத்தோட்டத்தை" கருதலாம். பலபயிர்களை உள் களுக்கு ஊட்டினால் அதிலிருந்து சூழல்தொகுதியை வினைத்திறனானதாக மாற்றுவதற்கான வழிவகைகளை நாம் எடுத்துரைக்கலாம். தொகுதி மயப்பட்டிருக்கின்ற போதும் ஒவ்வொரு தனியலகுக்கும் தனித்துவமான இயல்பிருக்கும். அவற்றை சரியாக இனங்கண்டால் நாம் சூழல்தொகுதியினை மாதிரியாகக் கொண்ட கட்டமைப்புக்குள் வீட்டுத்தோட்டத்தை அமைத்துக்கொள்ளலாம். வீட்டுத்தோட்டத்தினை கட்டியெழுப்புவதற்கு எந்த வடிவமைப்பையும் கருத்தில் கொள்ளலாம். இருக்கின்ற இடவசதிக்கேற்ப பல்வகைத் தாவரங்களை வளர்ப்பதற்கான வடிவமைப்பை உள்வாங்கினாலே போதுமானது. பல்வகைத்தன்மை கொண்ட வீட்டுத் தோடடங்களே பேண்தகு நிலையில் தொடர்ந்தும் இருப்பதனால் வீட்டுத்தோட்டத்தில் பயிர்களை வளர்க்கும் போது சூழல்தொகுதியின் வடிவமைப்பை கருத் ஒரு திட்டமிட்டதான பரப்பளவை நிர்ணயஞ்செய்ய முடியாது. கண்டியிலுள்ள வீட்டுத்தோட்டத்தின் விஸ்தீரணம் ஒரு ஹெக்டேயர் அளவுக்கிருக்கின்றமையால் நிலப்பரப்பை அடிப்படையாக கருதாது அதிலுள்ள பல்வகைத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு வீட்டுத்தோட்டத்தை அமைப்பதே சாலச்சிறந்தது. எமக்கு பயன்தரும் பல்பயன்தரு(ம்)தாவரங்களுக்கு மேலாக பறவைகள் சிறிய விலங்கினங்களுக்கான உணவினையும் வழங்கும் இடமாகவும் வீட்டுத்தோட்டங்கள் அமைதல் வேண்டும்.

பறவைகளின் ரீங்காரம், ஒலி மற்றும் அவற்றின் அசைவு என்பன எமது கண்ணுக்கும் காதிற்கும் விருந்தளிப்பதனால் இந்த விடயத்தையும் கருத்திலெடுப்பது நல்லது. காலைப் பொழுது குயிலின் ஓசையிலும் சிறுபறவைகளின் ரீங்கார ஒலியிலும் இயற்கை இரசித்து சந்தாப்பததின் போது எமக்கு ஆறுதலளிக்கும் விடயமாக சிறிய பறவைகளின் பூச்சிகளின் பிரசன்னம் அமைகின்றதெனலாம். வீட்டுத்தோட்டத்தின் விருந்தாளிகளாக சிறிய பறவைகளை கருதலாம். அவற்றிற்கும் அங்கே இடமிருக்க வேண்டும்.

சூழற்தொகுதியில் நுண்ணங்கிகளின் பங்கு அளப்பரியது. அத்துடன் மண்புழு போன்ற பெரிய உயிரினங்களின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

சேதன பயிர்ச்செய்கையில் இவற்றின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இவையெல்லாவற்றையும் அனுசரித்ததான சூழல் தொகுதியின் தேவையை நாடி அதற்கு நாம் என்றும் பக்கபலமாக இருக்கவும் வேண்டும்.

நல்லதை செய் அதையும் இன்றே செய் என்பதற்கு இங்கும ஓர் அர்த்தம் உண்டு.

# ஹவாய் தீவில் இரு ஹெலிகள் நேருக்கு நேர் மோதி விபத்து

## அமெரிக்க இராணுவத்தினர் 12 பேர் பலி!

(நியூயோர்க்)

அமெரிக்க மாநிலமான ஹவாயில் உள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்று ஒயாஹு. இதன் வடக்கு கடற்கரை பகுதியான ஹலெய்வா பகுதியில் அமெரிக்க கப்பற்படைக்கு சொந்தமான இரண்டு CH-53E ஹெலிகொப்டர்கள் கடந்த 14ஆம் திகதி இரவு நேர பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. இந்த இரண்டு ஹெலிகொப்டர்களிலும் தலா ஆறு பேர் இருந்தனர்.

பயிற்சியில் ஈடுபட்ட இந்த இரண்டு ஹெலிகொப்டர்களும் திடீரென நேருக்கு நேர் மோதி வெடித்து சிதறின.

ஹெலிகொப்டர்களில் இருந்த 12 பேரைக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் கடற்படையினரால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. 40 ஆயிரம் சதுர அடி நாட்டிகல் மைல் பரப்பளவில் இந்த தேடுதல் பணி தீவிரமாக நடைபெற்ற போதும் இராணுவத்தினரின் உடலைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதையடுத்து கடந்த செவ்வாய் அன்று தேடுதல் பணி நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில், ஹெலிகொப்டரில் பயணித்த 12 இராணுவத்தினரும் பலியானதாக அந்நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

பலியானவர்கள் அனைவரும் 21 முதல் 41 வயதிற்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# உடல் ஆரோக்கிய மேம்பாடு தொடர்பான தேசிய வாரம்

## 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுரைக்கமைய விளையாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்பில் 2016 ஜனவரி 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை "விளையாட்டு, உடல் ஆரோகிய மேம்பாடு தொடர்பான தேசிய வாரம்" எனவும் ஜனவரி 30 ஆம் திகதி " விளையாட்டு, உடல் ஆரோக்கிய மேம்பாடு தொடர்பான விசேட தினம்" எனவும் அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இலங்கையில் வேகமாக உயர்வடைந்து செல்லும் தொற்றாநோய் நிலைமைகளை கட்டுப்படுத்தி ஆரோக்கியம், மகிழ்ச்சி, விளையாட்டு ஆர்வம் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புதல் இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

விளையாட்டுக்களில் ஈடுபடுதல், உடல் ஆரோக்கியத்திற்காக உடற்பயிற்சியில் ஈடுபடுதல், அனைத்து சமூகங்கள் மத்தியிலும் விளையாட்டினை பிரசித்தப்படுத்தல் மற்றும் அதில் அவர்களை ஈடுபடுத்துதல், விளையாட்டினை மக்கள் மத்தியில் கொண்டு சென்று விளையாட்டில் ஆர்வமுள்ள ஒரு கலாசாரத்தினை நாட்டில் ஏற்படுத்துதல் என்பன இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களை இதில் பங்குகொள்ளச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இதற்காக நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

அதற்கமைய ஜனவரி 25 திங்கட்கிழமை அரச மற்றும் அரச சேவை விளையாட்டு, உடல் ஆரோகிய மேம்பாட்டு தினமாக"பெயரிடப்பட்டுள்ளதுடன்,

இது தொடர்பான முக்கிய நிகழ்வு அன்றைய தினம் காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை ஜனாதிபதி அலுவல கத்தின் வழிகாட்டலின் கீழ் ஜனாதி பதியின் தலைமையில் கொழும்பு காலி முகத திடலில் இடம்பெறும். (இ)

# இலங்கை, ஈரானுக்கு இடையில் கைதிகள் பரிமாற்று ஒப்பந்தம்



தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்து வரும் இரு நாட்டு கைதிகளையும் பரிமாற்றுவது தொடர்பில் இலங்கைக்கும், ஈரானுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ்வாறான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கான உத்தியோகபூர்வ கலந்துரையாடல் கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்றுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள ஈரான் நீதி அமைச்சர், இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடவுள்ளதாகவும், அதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்பிரகாரம், இலங்கை மற்றும் ஈரான் சிறைகளிலுள்ள இருநாட்டு பிரஜைகளும் புரிந்துணர்வின் அடிப்படையில் பரிமாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சோமாலியாவில் ஹோட்டல் மீது குண்டு வீச்சு; துப்பாக்கிச் சூடு

## பொதுமக்கள் 20 பேர் பலி!




(மொகதிஷு)

சோமாலியா நாட்டின் தலைநகர் மொகதிஷுவில் உள்ள பிரசிததி பெற்ற கடற்கரையோர உணவு விடுதி ஒன்றில் நேற்றுக் காலை அப்பாவி பொதுமக்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் 20 பேர் பலியாகியிருப்பதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு அல்-கொய்தாவுடன் தொடர்புடைய ஷெபாப் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.(இ)

# தொழிலாளர் சந்தைக்கேற்ற கல்வி முறைமை இலங்கையின் கல்வித்திட்டத்தில் இல்லை

(கொழும்பு)

கடந்த ஆண்டில் இலங்கையில் வேலை இல்லாதோர் வீதம் 5 வீதமாக காணப்படுகின்ற போதும் இது உண்மையான வேலை தேடுவோர் வீதத்தைப் பிரதிபலிக்கவில்லை. அத்துடன் இலங்கையின் கல்வி முறைமை தொழிலாளர் சந்தைக்குரிய தொழிலாளர்களை உருவாக்குவதில்லை எனவும் சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பத்தர முல்லையில் நடைபெற்ற "எமது கிராமம்" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து பாங்கொக்கில் நடைபெற்ற சர்வதேச கணிதம் மற்றும் விஞ்ஞானப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் மேற்படி நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சபாநாயகர், இலங்கைப் பல்கலைக் கழகங்களில் தமது பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் பட்டதாரிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் கலைப் பட்டதாரிகளாகவே காணப்படுகின்றனர். இவர்களின் உற்பத்தி மட்டம் மற்றும் அதற்கான கேள்வி தொழிற் சந்தையில் குறைவாகவே உள்ளது.

கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம் மற்றும் சர்வதேச மொழி (ஆங்கிலம்) போன்ற துறைகளில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் பட்டதாரிகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளனர்.

ஆனால் இத்துறைகளில் அதிக சம்பளத்துடன் நல்லதொரு எதிர்காலத்துக்கான பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கான கேள்வி உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் மிகவும் உயர்வாகவே காணப்படுகிறது. எனவே பயிற்றப்பட்ட தொழிலாளர்களை உருவாக்கி அவர்கள் தாங்களாகவே தொழிற் சந்தையில் கேள்வியை ஏற்படுத்துவதற்கு இலங்கையின் தேசிய கல்வித்திட்டம் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பெரும் சவால் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

எதிர்வரும் 2030 இல் இலங்கையை ஆசியாவின் "சிறப்புத்தேர்ச்சிநிலையம்" ஆக்குவதற்கு பாரிய அபிவிருத்தி திட்டங்களை இந்த வருடம் முன்னெடுத்து உயர்ந்த வருமானத்தைப் பெறும் நோக்கத்தை அடைவதற்கு நாட்டின் பல்கலைக்கழகங்களில் மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கான கேள்வி மிகவும் அதிகமாகவே இருக்கும்.



மேலும் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், ஆங்கிலம் போன்ற துறைகளை கிராம மட்டங்களுக்கு எடுத்துச்சென்று திறன் மிக்க தொழிற்படையை உருவாக்குவதற்கு அரசாங்கம் இன்னும் அதிகமாக முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என சபாநாயகர் கருஜயசூரிய வலியுறுத்தினார். தாய்லாந்தில் நடைபெற்ற கணிதம் மற்றும் விஞ்ஞான சர்வதேசப்போட்டியில் பங்குபற்றிய மற்றும் பதக்கங்களைப் பெற்ற 22 மாணவர்களையும் சபாநாயகர் பாராட்டி கௌரவித்தார்.

மேலும் அபிவிருத்தி இலக்கை அடைவதற்குத் தேவையான தொழிலாளர்களை உருவாக்கும் திறன் இலங்கை அபிவிருத்தித்திட்டத்திற்கு வெகு தூரத்தில் இல்லை என்றும் சபா நாயகர் சுட்டிக்காட்டினார். (3)

# பாகிஸ்தானிடம் 130 அணுகுண்டுகள்; அமெரிக்க பாராளுமன்றத்தில் அதிர்ச்சி

அமெரிக்க பாராளுமன்ற ஆராய்ச்சி சேவை அமைப்பு 28 பக்கங்களை கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் 130 அணுகுண்டுகள் வரை குவித்துள்ளதாக அதிர்ச்சி தகவல் இடம் பெற்றுள்ளது.

மேலும் அதில், "பாகிஸ்தானிடம் அநேகமாக 110 முதல் 130 அணுகுண்டுகள் வரை இருக்கலாம். அதை விட கூடுதலாகவும் இருக்கலாம். இஸ்லாமாபாத் அணுவை பிளக்கும் பொருட்களை தயாரிக்கிறது. தொடர்புடைய உற்பத்தி வசதிகளை பெருக்கி உள்ளது. கூடுதல் அணு ஆயுதங்களை தயார் நிலையில் வைக்கிறது" என கூறப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், இந்தியாவின் இராணுவ நடவடிக்கையை தடுக்கும் நோக்கத்தில் பாகிஸ்தான் அணு ஆயுத குவிப்பில் ஈடுபடுவது, இரு நாடுகளுக்கு இடையே அணு ஆயுத மோதல் நெருக்கடியை அதிகரிப்பதாக அமைந்துள்ளது எனக் கூறி கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## 4 பெண்கள் மீது வன்புணர்வு

# பொலிஸ் உத்தியோகத்தருக்கு 263 ஆண்டுகள் சிறை!


அமெரிக்காவின் ஒக்லஹோமா நகரைச் சேர்ந்தவர் டேனியல் ஹோல்ட்ஸ்கிலா(29). கடந்த 2013ஆம் ஆண்டு அந்நகரில் பொலிஸ் உத்தியோகத்தராக பணியில் சேர்ந்த அவர் தனது பதவியைக்காட்டி, மிரட்டி, பயமுறுத்தி நான்கு பெண்களை பலவந்தப்படுத்தி வன்புணர்வுக்குட்படுத்தினார் என இவர் மீது புகார் எழுந்தது.

இதையடுத்து, கடந்த 2015 ஆம் ஆண்டு பணிநீக்கம் செய்யப்பட்ட டேனியலுக்கு எதிராக ஒக்லஹோமா நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

டேனியலுக்கு எதிரான வழக்கில் 13 பெண்கள் சாட்சி அளித்தனர். அவர்மீதான 36 குற்றச்சாட்டுகளில் 18 நிரூபிக்கப்பட்டன.

இதையடுத்து, இவ் வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பளித்த நீதிபதி, டேனியல் ஹோல்ட்ஸ்கிலாவுக்கு 263 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார். (இ)

# பரியோவான் கல்லூரியின் பொக்கிஷம் தலைமை ஆசிரியர் எஸ்.பி.ஜீவானந்தம்



பரியோவான் கல்லூரியின் பொக்கிஷம் தலைமை ஆசிரியர் எஸ்.பி.ஜீவானந்தம் ஆசிரியர் திலகமாக, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்த ஒரு உதாரண புருஷர்.

நல்லொழுக்கமான மாணவர்களை உருவாக்கப் பாடுபட்ட ஒரு ஆசிரியப்பெருந்தகை.

ஒவ்வொரு மாணவனின் மீதும் தனிப்பட்ட கவனங்களைச் செலுத்தி அவனுள் ஒளிந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்ந்து மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கிய ஒரு பெருந்தகை.

மாணவர்கள் ஒழுக்கமில்லாத போதும் ஆசிரியர்கள் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடையாத போது ஆசிரியர்கள் அவர்களின் வேதனைகளில் பங்கு கொண்டு அவர்களைச் சாதனையாளர்களாக மாற்ற வேண்டும்.

மாணவர்கள் கல்வியில் முதலிடத்தை அடையும்போது அவர்களைச் சாதனையாளர்களாக ஆக்கிய ஆசிரியர்களுக்கு சமூகத்தில் மதிப்பளிக்கப்பட வேண்டும்.

கண்டிப்புள்ள ஆசிரியர்கள் நல்லொழுக்கமான மாணவனை உருவாக்குவார்கள். ஆசிரியர்கள் அன்புடனும், பண்புடனும் கலாசார விழுமியங்களுடனும் போதனைகளில் ஈடுபடவேண்டும்.

ஒவ்வொரு மாணவனின் இலட்சியக் கனவுகளை நிவர்த்தி செய்யும் சாதனையாளர்களாக ஆசிரியர்கள் உருவாக வேண்டும். சாதனைகள் படைப்பது பெருமையல்ல. சோதனைகள்எழுதி, வேதனைகள் பட்டு, சாதனைகள் படைக்கும் ஒவ்வொரு மாணவனின் வெற்றிக்குப் பின்னால் ஆசிரியர்கள் குழாம் இருக்கின்றது என்பது மறக்க முடியாத உண்மை. இத்தகைய அனைத்து உதாரணங்களுக்கும் உதாரண புருஷராக வாழ்ந்து காட்டியவர் அமரர் எஸ்.பி.ஜீவானந்தம். ஒரு மாணவன் சாதனையாளனா? அல்லது கல்வியில் தோல்வி கண்ட வேதனையாளனா? என்பது முக்கியமல்ல.

ஒழுக்கமான பழக்க வழக்கத்துடன் கல்வியைக் கற்றாலே அவன சாதனையாளன். ஒழுக்கமற்ற கல்வி வேதனைக்குரியது.

திறமை என்பது ஒழுக்கத்துடன் சம்பந்தப்பட்டது. ஒழுக்கமில்லாத திறமை, ஒழுக்கமில்லாத கல்வி, ஒழுக்கமில்லாத சாதனை சமூகத்துக்கு உதவாது. சோதனைகள் எழுதுகின்றோம் வேதனைகள் அனுபவித்து சாதனைகள் படைக்கின்றோம், சாதனைகளின் முடிவில் அந்த மாணவனின் ஒழுக்கம் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படுகின்றது.

அவன் தான் நாளைய சமுதாயத்தின் தலைவன் ஆகின்றான். அத்தகைய ஒழுக்கமுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களைச் சாதனையாளர்களாக்கிய பெருமை எஸ்.பி.ஜீவானந்தம் அவர்களுக்கு உரியதாகும்.

ஒரு மாணவனை ஆசிரியர் எஸ்.பி.ஜீவானந்தம் எப்படிச் சிறப்பாகச் செதுக்கினார் என்பதை இந்தச் சிறுகுறிப்பு உண்மைக் கதையாக வெளிவருகின்றது.

"அந்த மாணவன் 1974 இல் பரியோவான் கல்லூரியில் நுழைந்தான். பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றான். ஆசிரியர் ஜீவானந்தம் அவனைத் தட்டிக்கொடுத்து நீ வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ வரத்தேவையில்லை, அப்புக்காத்தாக வாடா எனக் கூறினார்.

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தபோது சட்டம் படிக்கச் சொன்னார். சட்டத்தரணியாக வந்தபோது பிரபல சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்திடம் அவனை அழைத்துச்சென்று, அவருடைய கனிஷ்ட சட்டத்தரணியாகச் சேர்த்து விட்டார். காலம் கனிந்தது. அந்த மாணவனை நோக்கி நீதிராசாவாக வா எனச் சொன்னார். சிறிது காலத்தின் பின்னர் நீ மேல் நீதிமன்ற நீதிபதியாக வா என்று சொன்னார்.


2015,மாசி மாதம் நீ யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக வா எனக் கூறினார். அந்த மாணவன் அவரிடம் சென்று ஆசி பெற்றான். நல்லொழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கினேன்.

யாழ்ப்பாணத்தில் நல்லொழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை நீ வழி நடத்து. மாணவர் சமுதாயத்திலிருந்து போதைவஸ்துக் குற்றங்களை இல்லாது ஒழி. மாணவர்கள் சாதனையாளர்களாக, நல்லொழுக்க சீலர்களாக உருவாகுவதற்கு உன் கையிலிருக்கும் சட்ட அதிகாரத்தைப் பாவி. இறுதியாக மாணவர்களைத் தண்டிக்கக்கூடாது, கண்டிப்புடன் நடத்து என்றார்.

அவருடைய இலட்சியக் கனவில் மிதந்த மாணவன் நீதிபதி இளஞ்செழியன் ஆகிய யான் என்பதைப் பெருமையுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைவதுடன், இன்று நடைபெறும் அமரர் எஸ்.பி.ஜீவானந்தத்தின் ஆத்ம சாந்திப் பூசையில், பிரார்த்தனையில் ஈடுபடும் அனைவருக்கும் பிரார்த்தித்து எனது இச்சிறுகுறிப்பை அவருக்குச் சமர்ப்பணமாக முன்வைக்கின்றேன.

மா.இளஞ்செழியன்
நீதிபதி
யாழ்.மேல் நீதிமன்றம்

## சூரிய குடும்பத்தில் புதிதாக 9 ஆவது கோள்; பூமியை விடவும் பத்து மடங்கு எடை அதிகம்



சூரிய குடும்பத்தில் புதிதாக 9 ஆவது கோளை வானியியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

சூரிய குடும்பத்தில் 9 கோளகள் உள்ளன. இதில் 9 ஆவது கோளாக கருதப்பட்ட புளுட்டோ சூரிய வட்டப்பாதைக்கு அப்பாற பட்டு இயங்குகிறது என்றும், அது சுயாஈர்ப்பு சக்தி கொண்டது என்றும் கண்டறியப் பட்டது. இதனால், இது கோள்களின் பட்டியலில் இருந்து 2006 ஆம் ஆண்டில் நீக்கப் பட்டது.

இந்நிலையில், சூரிய குடும்பத்தில் பூமியை விட 10 மடங்கு எடை கொண்ட புதிய கோளை கண்டுபிடித்துள்ளனர்.

இது சூரிய குடும்பத்தின் 9 ஆவது கோள் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

கலிபோர்னியா தொழில் நுட்ப கல்வி மையத்தின் விஞ்ஞானிகளான கான்ஸ்டான்டின் பேட்டிஜின், மைக் பிரவுன் ஆகிய இருவரும் தான் இதை கண்டறிந்துள்ளனர். இது சூரியனை ஒரு முறை சுற்றி வர சுமார் 20 ஆயிரம் ஆண்டுகள் ஆகிறது.

புதிய கோள், சூரியனிலிருந்து பூமி இருக்கும் தூரத்தை விட, 50 மடங்கு தொலைவில் உள்ளது. புளுட்டோவை விட 5 ஆயிரம் மடங்கு எடை கொண்டது. இதை கண்களால் காண முடியவில்லை என்றாலும், அது இருப்பதற்கான அறிகுறி தெளிவாக உள்ளது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். (இ)

பிரித்தானியாவில் கொள்ளையடித்த

## ஈழத் தமிழருக்கு சிறைத் தண்டனை

பிரித்தானியாவின் டெர்பி பகுதியில் அமைந்துள்ள தபால் நிலையத்தில் இருந்து 13 ஆயிரம் பவுண்ட் திருட்டு போயுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இது குறித்து நடைபெற்ற விசாரணையில் அந்த தபால் நிலையத்தின் அருகாமையில் கடை வைத்திருக்கும் இலங்கை தமிழர்கள் இருவர் மீது விசாரணை அதிகாரிகளுக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இதனையடுத்து 36 வயதான ராசதுரை ரகுவண்ணன் என்பவரையும் அவரது கடையில் பணியாளராக இருக்கும் 35 வயதான சத்தியநாதன் கனகசபை ஆகிய இருவரையும் பொலிஸார் விசாரித்துள்ளனர்.

இதில் அவர்கள் இருவரும் முரணான தகவல்களை அளித்துள்ளனர்.

3 மர்ம நபர்கள் தங்கள் கடை மற்றும் தபால் நிலையத்தில் ஆயுதங்களுடன் புகுந்து பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் இவர்களது கடையின் அருகாமையில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் இது குறித்த எந்த பதிவுகளும் இல்லை என விசாரணை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இதனையடுத்து தபால் நிலையத்தில் இருந்து 13 ஆயிரம் பவுண்ட் அளவுக்கு கொள்ளையிட்டது Northampton பகுதியை சேர்ந்த ரகுவண்ணன் தான் என விசாரணை அதிகாரிகள் முடிவுக்கு வந்துள்ளனர்.

தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் முடிவில் ரகுவண்ணன் என்பவருக்கு 20 மாத சிறைத் தண்டனையும், கனகசபை என்பவருக்கு 10 மாத சிறைத் தண்டனையும் அளித்து தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

மேலும் 2 ஆண்டுகள் தடை விதித்தும் 100 மணி நேரம் ஊதியமில்லாமல் பணியாற்ற வேண்டும் எனவும் கனகசபை என்பவரை அறிவுறுத்தியுள்ளனர்.

ரகுவண்ணன் களவாடியதாக கூறும் பணத்தை திருப்பித் தர சிலர் முன் வந்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (இ)

## கொள்ளையடித்தால் மரணம் மது அருந்தினால் கசையடி

### ஐ.எஸ். தீவிரவாதிகளின் தண்டனைகள்

லிபியாவில் கொள்ளையடித்த 3 பேரை பொதுமக்கள் முன்னிலையில் சுட்டுக் கொன்ற புகைப்படங்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் இணையத்தில் பகிர்ந்துள்ளனர்.

இஸ்லாமிய சட்டத்தை பின்பற்றி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் குற்றச்செயலில் ஈடுபடுபவர்களுக்கு கடும் தண்டனை அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் லிபியாவில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் பொதுமக்கள் முன்னிலையில் 3 பேரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

கொள்ளையில் ஈடுபட்டது, இஸ்லாமிய மதத்தில் இருந்து வேறு மதத்துக்கு மாறியது, கடவுளை பற்றி தவறாக கூறியது போன்ற செயல்களுக்காக 3 பேரை அவர்கள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

மேலும் வைன் குடித்ததற்காக 4 பேருக்கு கசையடி தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான புகைப்படங்களையும் தீவிரவாதிகள் இணையத்தில் பதிவேற்றியுள்ளனர்.

இதனிடையே சிறு சிறு குழுக்களாக உள்ள தீவிரவாதிகளை தங்களின் அமைப்பின் கீழ் கொண்டுவரவும் அவர்கள் முயற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாகவே ஏனைய அமைப்புகளுக்கு விசுவாசமாக இருப்பவர்களுக்கு அவர்கள் மரண தண்டனை அளித்தும், எச்சரிக்கை விடுத்தும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## 2050 இல் கடலில் மீன்கள் இல்லாமற்போகும் அபாயம்

உலகம் முழுவதும் ஒரு ஆண்டுக்கு குறைந்தது 8 மில்லியன தொன்கள் அளவுக்கு பிளாஸ்ரிக் குப்பைகள் கடலில்கொட்டப்பட்டு வருகின்றன.

இது ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு லொறி மூலமாக குப்பையை கொட்டுவதற்கு சமமானதாகும். இதற்கு உடனடியாக தீர்வு காணப்படா விட்டால் 2030 ஆம் ஆண்டுக்குள் இருமடங்காகும் நிலை ஏற்படும். இதுவே, 2050 ஆம் ஆண்டுக்குள் 4 மடங்காக அதிகரித்து விடும்.

இதன் எதிரொலியாக, கடலில் மீன்களை விட பிளாஸ்ரிக் குப்பைகளே அதிகம் இருக்கும் அபாயமான நிலை உருவாகும்.

தற்போது, கடலில் 150 மில்லியன் தொன்களுக்கும் அதிகமாக பிளாஸரிக் குப்பைகள் உள்ளன.

கடந்த 50 ஆண்டுகளில் பிளாஸ்ரிக் பயன்பாடு 20 மடங்காக அதிகரித்துள்ளது. அடுத்த 20 ஆண்டுகளில் இது மேலும் இரட்டிப்பாகும் அபாயமும் உள்ளது. பெரும்பாலான பிளாஸ்ரிக்கால் பொதி செய்யப்பட்ட பொருட்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

எனவே 2050 ஆம் ஆண்டில் கடலில் மீன்கள் இல்லாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ)

# இலங்கையிலிருந்து தங்கம் கடத்திய இந்தியர்கள் கைது

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட 8.325 கிலோகிராம் தங்கக்கட்டிகளை, இந்திய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சட்டவிரோதமான முறையில் கடத்தப்பட்ட 8.325 கிலோகிராம் தங்கக்கட்டிகளை, இந்திய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப் பற்றியுள்ளனர்.

இவை இந்திய விலைப்படி 22.1 மில்லியன் ரூபாய் பெறுமதிக் கொண்டவை எனவும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருச்சி- தஞ்சாவூர் பகுதியில், இந்தியாவின் சுங்கத்திணைக்கள அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இந்த தங்கக்கட்டிகள் கைப் பற்றியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய சுங்க அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே மேற்படி சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையிலிருந்து படகொன்றின் மூலம் இந்தியாவுக்கு தங்கக் கட்டிகள் கடத்தப்பட்டுள்ளதாகவும் அவை நாகபட்டினம் மாவட்டத்திலுள்ள கடல் பிரதேசத்தினூடாக கொண்டுவரப்பட்டதாகவுமே அவர்களுக்கு தகவல் கிடைத்ததாகவும் சுங்க அதிகாரிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

கைது செய்யப்பட்ட இருவரும் இந்தியப்பிரஜைகள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 22.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.00 | 146.02 |
| பவுண்ட் | பிரிட்டன் | 201.06 | 208.21 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 152.93 | 159.06 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 139.84 | 145.68 |
| டொலர் | கனடா | 98.79 | 102.83 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.41 | 103.08 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.65 | 102.44 |
| ரூபா | இந்தியா | 2.1218 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.1791 |
| குவைத் | டினார் | 472.1903 |
| ஓமான் | ரியால் | 373.6934 |
| கட்டார் | ரியால் | 39.5161 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3421 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1789 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 120 | 150 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 50 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 300-350 | 400 | 400 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 120 | 100 | 100 | 100 | 140 | 120 |
| கரட் | 200 | 200 | 140 | 150-300 | 400 | 250 |
| பூசணி | 60 | 80 | 40 | 50 | 80 | 60 |
| புடோல் | 80 | 80 | 50 | 80 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 50 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 70-100 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 300 | 50 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 150 | 200 | 150 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 120 | 160 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 60 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 140 | 120 | 150 | 160 | 160 | 160 |
| லீக்ஸ் | 150 | 120 | 80 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 240 | — | — | — | 280 | — |
| கறிமிளகாய் | 300 | — | 200 | 250 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 600 | — | — | — | — | 800 |
| போஞ்சி | 180 | 160 | — | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 110 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 35 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 150 | 100 | 50 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-45 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 140 | 100 | 100 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 200 | 160 | 200 | 250 |
| முள்ளங்கி | 50 | 40 | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 15 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | — | 60-80 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப் புலிகளுக்கு சொந்தப் பணத்தைக் கொடுத்தார் எம்.ஜி.ஆர். 86

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தமிழக அரசு பண உதவி செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. அதனால் தனது சொந்தப் பணத்தில் இருந்து 4 கோடியைக் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

இதுபற்றி விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் ஒரு கட்டுரையில் கூறியிருப்பதாவது:-

### எம்.ஜி.ஆர் உதவி

எங்களுக்கு தேவை ஏற்பட்ட வேளைகளில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அளித்த நிதி உதவிகளை ஆதாரமாகக் கொண்டே இயக்கம் ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு தடவை பெருமளவில் நிதி தேவைப்பட்டது. தலைவர் பிரபாகரன் என்னை எம்.ஜி.ஆரிடம் தூது அனுப்பினார். நான் எம்.ஜி.ஆரைச் சந்தித்தபொழுது மூத்த அமைச்சர் ஒருவரும் அவருடன் இருந்தார்.

இராணுவ அரசியல் ரீதியாக விடுதலைப்புலிகள் இயக்கம் பெரும் அளவில் வளர்ச்சி கண்டுவிட்டது. பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவு செய்த வேண்டி இருக்கிறது. இம்முறை பெரிய தொகையில் பணம் தேவைப் படுகிறது. தம்பி பிரபாகரன், உங்களைத்தான் நம்பி இருக்கிறார் என்றேன்.


பெரிய தொகையா? எவ்வளவு தேவைப்படுகிறது? என்றார், முதல்வர்.

ஐந்து கோடி வரை தேவைப் படுகிறது என்றேன்.

எம்.ஜி.ஆர். உடனே அருகில் இருந்த மூத்த அமைச்சரைப் பார்த்து மாநில அரசு மூலமாக ஏதாவது செய்யலாமா? என்று கேட்டார்.

அமைச்சர் சில விநாடிகள் வரை சிந்தித்துவிட்டு போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்து மக்களுக்கென தமிழ்நாட்டு அரசால் திரட்டப்பட்ட நிதி இருக்கிறது. நான்கு கோடிக்கு மேல் வரும். அந்த நிதியை இவர்களுக்குக் கொடுக்கலாமே? ஈழ மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு இந்த நிதி வழங்கப்படுவதில் தப்பில்லை அல்லவா? என்றார்.


அப்படியே செய்யுங்கள். இந்த விடயத்தை உங்கள் பெறுப்பில் விடுகிறேன் என்றார் எம்.ஜி.ஆர்.



### வேலைத் திட்டம்

இதன்பிறகு மூத்த அமைச்சரவை பலமுறை சந்தித்தோம்.

தமிழ்நாடு அரசு திரட்டிய நிதியை உங்களுக்குத் தருவது என்றால் அரசு விதிமுறைகளைச் சரியானபடி பின்பற்ற வேண்டும். உங்களது தமிழர் மறுவாழ்வு அமைப்பின் மூலமாக அதிகாரபூர்வமான



வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக்கொடுங்கள். இந்தத் திட்டம், நான்கு கோடி ரூபாய் வரை செலவினங்கள் கொண்டதாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அதன்படி ஒரு மருத்துவமனை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தைத் தயாரித்து தமிழர் மறுவாழ்வு கழகத்தின் சார்பில் அமைச்சரிடம் கொடுத்தேன்.

இறுதியாக அரசு செயலகத்தில் வைத்து நான்கு கோடி ரூபாய்க்கான காசோலை என்னிடம் கொடுக்கப்பட்டது.

### அரசியல் பூகம்பம்

இந்த நிதி விவகாரத்தில் அரசு அதிகாரிகள் பலர் சம்பந்தப்பட்டு இருந்ததால், இந்த விடயம் தமிழ்நாட்டு ஊடகங்களுக்குக் கசிந்து விட்டது. ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இந்த விடயத்தைத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டது. இது ஒரு பெரிய அரசியல் பூகம்பத்தைக் கிளப்பியது.


விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டத்துக்குத் தமிழக அரசு நிதி உதவி செய்வதாகவும் இலங்கையின் அரசுரிமையைத் தமிழக முதலமைச்சர் மீறுவதாகவும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கடுமையாகப் புகார் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி உடனடியாக இதுகுறித்து எம்.ஜி.ஆருடன் தொடர்பு கொண்டு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

### அவசர அழைப்பு

அன்பு மாலை தன்னை வந்து சந்திக்கும்படி எம்.ஜி.ஆர். எனக்கு அழைப்பு விடுத்தார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற வருத்தத்துடன் நான் எம்.ஜி.ஆர். வீட்டுக்குச் சென்றேன். அங்கு முதலமைச்சருடன் எங்களுக்குக் காசோலை வழங்கிய மூத்த அமைச்சரும் இருந்தார்.

எம்.ஜி.ஆர். ஆத்திரத்துடன் காணப்பட்டார். ராஜீவ் காந்தியிடம ஜெயவர்த்தனா முறையிட்டது பற்றியும் அது பற்றித் தன்னுடன் ராஜீவ் காந்தி பேசியது குறித்தும் விவரமாக கூறினார்.



(தொடரும்)

# பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 6பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

கொட்டதெனிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஆறு உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சிறுமி சேயா சௌதம்மினி கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவன், மற்றுமொரு குடும்பஸ்தர் ஆகியோரை சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்து தாக்கிய சம்பவம் தொடர்பில் கொட்டதெனிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பொலிஸ்மா அதிபர் தீர்மானித்துள்ளார்.

இதன்படி, கொட்டதெனிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர், உப பொலிஸ் பரிசோதகர்கள் இருவர், ஒரு பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக இவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தீர்மானித்துள்ளார்.

பாடசாலை மாணவன் மற்றும் ஏனைய நபர் ஆகியோர் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் பொலிஸ்மா அதிபரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய கொட்டதெனிய பொலிஸ நிலைய அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் நேரடிக் கண்காணிப்பில் விசாரணைகள் நடத்தப்பட்டன. சந்தேக நபர்களை சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்து தாக்கியமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த சந்தேக நபர்களின் பெறுமதிமிக்க பொருட்களையும் காணவில்லை என விசாரணைகளின் மூலம் மேலும் தெரியவந்துள்ளது.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (இ)

# இன்று ஒரு தகவல்

## தற்பெருமையும் தன்னம்பிக்கையும்

"நாம் இல்லாத ஓர் இடத்தில் நம்மைப் பற்றி யாரேனும் பெருமையாகச்சொன்னால் அது தான் நமக்குக் கிடைக்கும் முதற் தரமான புகழாகும்"

நாம் அந்த இடத்தில் இருக்கும்போது மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டுமானால் அது இரண்டாந்தரமான புகழாகவே இருக்கும்.

ஆனால்,

மற்றவர்கள் எல்லாரும் பாராட்டாத நிலையிலும் தன்னைத்தானே ஒருவன் உயர்வாகச் சொல்லிக்கொண்டால், அது மூன்றாம் தரமான புகழாகும். இந்தப் புகழே தற்பெருமை என அழைக்கப்படுவது.

இத்தகைய புகழ் என்னும் விளக்கின் மீது ஆசை கொண்டு விட்டில் பூச்சிகள் போல் சாகும் மனிதர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள்.

நாம் செய்து முடித்த சாதனைகளைப் பட்டியலிட்டுச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை.

காரணம்,இந்த உலகம் நம்முடைய ஒவ்வொரு செயலையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது.

அதே நேரத்தில், நாம் செய்யாத ஒன்றை, அடைந்திராத ஒன்றை அது நமக்குப் பெருமையை அளிக்கும் என்ற நம்பிக்கையில் சொல்லிக் கொண்டிருந்தாலும், உண்மையை அறிந்து வைத்திருக்கும் உலகம், அது பொய்யென்று தெரிந்தவுடன் எள்ளி நகையாடுகிறது.

"நிறைகுடம் தளம்புவதில்லை"

"குரைக்கின்ற நாய் கடிக்காது" ஆகிய பழமொழிகளை இந்த உலகம் நன்கு புரிந்து வைத்திருக்கிறது.

ஆக,

தற்பெருமை பேசுவதில் ஒருவருடைய உண்மையான மதிப்புக் குறைகிறதே தவிர கூடுவதில்லை.

எனவே, தற்பெருமை பேசுவதில் உள்ள தவறை உணர்ந்து தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தற்பெருமைக்கும் தன்னம்பிக்கைக்கும் நெருங்கியதொடர்பு உண்டு.

குறிப்பிட்ட ஒரு காரியத்தை என்னால் சாதிக்க முடியும் என்று மனப்பூர்வமாக நம்புவது, தன்னம்பிக்கை.

அதில் செயற்கையாகச் சேர்த்து தம்பட்டம் அடிப்பது தற்பெருமை.

வீணாகப்போகும் தண்ணீரை அடைத்தால் ஏரியின் நீர் மட்டம் உயரும். அப்படிக்காக்கப்படும் நீர் நற்செயல்களுக்குப்பயன்படும்.

அதேபோல "வீண் வார்த்தை பேசுவதைக் குறைத்துக்கொண்டால் மன வளம் அதிகமாகும்" பேச்சை விட செயலே நமக்குப் பெருமை தரக் கூடியது என்று உணரும் நிலை வரும்.

அத்தகைய மனநிலை தன்னம்பிக்கையைத் தானாக வளர்க்கக் கூடியதாக இருக்கும்.

அத்தகைய தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு விட்டால் எதிலும் வெற்றி எப்போதும் வெற்றிதான்!

லேனா தமிழ்வாணன்

# மீனவர்களின் ஊழியர் சேமலாப நிதியை ஒரு மாதத்திற்குள் வழங்கத் தீர்மானம்

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

**மீனவர்களின் 6 கோடி ரூபா ஊழியர் சேமலாப நிதியை ஒரு மாதத்திற்குள் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

இந்த பணத்தை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் நிலவும் நிதிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பணத்தை தருவதற்கு திறைசேரி இணங்கியுள்ளதாகவும் அமரவீர தெரிவித்துள்ளார்.

மேலும், மீனவர்களின் இந்த ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பிரச்சினையை வைத்து ஒரு சிலர் அரசியல் நடத்துவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இதுபோன்ற வதந்திகளை நம்பாமல் உண்மை நிலைமையை உணர்ந்து செயற்படுமாறும் மீனவர்களுக்கு அமைச்சர் மகிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

# நிதி மோசடிப் பிரிவு சட்டவிரோதமானது

## விசாரணைகளுக்கு செல்ல வேண்டாம்

(கொழும்பு)

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு சட்டவிரோதமானது என்பதுடன் அதன் விசாரணைகளுக்கு அழைக்கப்படுகின்றவர்கள் அதனைப் புறக்கணிக்குமாறு மகிந்த அணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் தாய்நாட்டுக்கான இராணுவ வீரர்கள் அமைப்பின் தலைவருமான மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

மகிந்த ஆதரவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முன்தினம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேஜர் அஜித் பிரசன்ன மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

பொலிஸ் திணைக்களத்தில் புதிதாக ஒரு பிரிவை உருவாக்குவதாயின் பாதுகாப்பு அமைச்சர் தான் அதனை உருவாக்க வேண்டும். ஆனால் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவு பொலிஸ்மா அதிபரின் வர்த்தமானி அறிவித்தல் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இது சட்டவிரோதமானது.

எனவே இனிவரும் காலங்களில் யாராவது பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினால் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டால் அதற்கு சமுகமளிக்க வேண்டியதில்லை.

அதேபோன்று பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு யாரையும் கைது செய்யவும் முடியாது. அவ்வாறு கைது செய்வதற்கு வந்தால் அடித்து விரட்டவும் முடியும்.

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவிற்கு எதிரான எனது விமர்சனம் குறித்து யாரும் இதுவரை என்னிடம் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை. அவ்வாறு விசாரணை மேற்கொண்டாலும் நான் அஞ்சப் போவதுமில்லை என்றும் மேஜர் அஜித பிரசன்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ)

### வாடகை கார்களின் வியாபாரப் பெயராக மாறியுள்ள சிங்க லே

இனவாதத்தை தூண்டும வகையில் கடந்த வாரங்களில் பேசப்பட்டு வந்த சிங்க லே சிங்கத்தின் இரத்தம் என்ற அமைப்பின் பெயரை, நாடெங்கிலும் உள்ள வாடகை கார் உரிமையாளர்கள் தமது வியாபார பெயராக பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

இதன் காரணமாக சிங்க லே என்ற சுவரொட்டிகளை பொது இடங்களிலும் தனியார் வாடகை வாகனங்களிலும் காண முடிகிறது. இந்த நிலையில் இது குறித்த அமைப்பின் ஒரு அரசியல் பிரசாரம் என்று தேசிய சமாதான பேரவை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் தேசியவாத கருத்துக்களை வெளிக்கொணர முயற்சிக்கப்படுவதாகவும் பேரவை குறிப்பிட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தை கையாள புதிய சட்டவாக்கங்கள் கொண்டு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேசிய பேரவை தெரிவித்துள்ளது.(இ)

# அதிகாரத்தால் இலஞ்ச ஊழலை மறந்த ஜனாதிபதியும் பிரதமரும்

## ஜே.வி.பி. விசனம்

அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் இலஞ்ச ஊழல் மோசடிகள் பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மறந்து விட்டனர் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிதத்துள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் இலஞ்ச ஊழல் மோசடிகளுக்கு எதிராக போராடுவதாக வாக்குறுதி அளித்து அதிகாரத்தை பெற்றுக்கொணடனர்.

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே ஜனாதிபதியும் பிரதமரும் இலஞ்ச ஊழல் மோசடிகளுக்கு எதிராக போராடுவதாக தெரிவித்திருந்தனர்.

கடந்த அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் சாதாரண பொதுமக்களுக்கு சட்டத்தை அமுல்படுத்திய போதிலும் அரசியல் நண்பர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாத நிலைமை நீடிக்கின்றது.

அரசியல் காரணிகளின் அடிப்படையில் இலஞ்ச ஊழல் மோசடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் ஒரு நாளும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களை தண்டிக்க முடியாது.

அமைச்சரவையின் மத்தியிலும் பிரதி அமைச்சர்கள் மத்தியிலும் இராஜாங்க அமைச்சர்கள் மத்தியிலும் குற்றவாளிகள் இருக்கின்றார்கள்.

குற்றம் சுமத்தி நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட வேண்டியவர்களை ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்து இந்த அரசாங்கம் அமைச்சுப் பதவிகளை வழங்கி வருகின்றது என ரில்வின் சில்வா வருத்தம் வெளியிட்டுள்ளார்.

அண்மையில் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (இ)




# முரடனை முடக்கிய நோய்!

...உடம்பு வேறு இளைத திருக்கிறது. உனக்கு ஏதோ நோய் வந்திருக்கு என்று நினைக்கிறேன்," என்று சொல்லிவிட்டு சென்றான்.

கலிவரதன் குழப்பத்தில் ஆழ்ந்தான்.


"இவர்களுக்கெல்லாம் என்னவாயிற்று. முதலில் ஒரு சிறுவன் நம் உடம்பைப் பற்றி விசாரித்தான். இவனும் ஏதோ சொல்கிறானே எனக்கு எதுவும் நோய் வந்தது போல் தெரிய வில்லையே..." என்று யோசி த்தபடி சென்றான்.

இன்னும் சற்று தூரம் சென்றிருப்பான் எதிரே வந்த ஒரு முதியவர் கலிவரதனை தடுத்து நிறுத்தி உற்றுப் பார்த் தார்.

"ஏம்பா உன்னைப் பார்த் தால் பெரிய நோய் வந்தது போல் தெரிகிறதே உன் கையைக் கொடு தொட்டுப் பார்க்கிறேன்," என்று அவன் கையைப் பிடித்தார்.

பிறகு திடுக்கிட்டவராக, "என்ன தம்பி உன் உடம்பு கொதியாய் கொதிக்கிறதே... இப்படி கடுமையான காய்ச்சல் அடிக்கும்போது ஊர் சுற்ற லாமா? உடனே போய் வைத் தியரைப் பார் நன்றாக ஓய்வெடுத்துக்கொள்," என் றார்.

பெரியவர் தன் வழியே சென்றார். கலிவரதன் இப் போது முற்றிலும் குழம்பிப் போனான். தன்னைத் தானே தொட்டு பார்த்துக் கொண் டான். அவன் உடம்பு சுடுவது



போல் அவனுக்கு தெரிந்தது. அவனுக்கு படபடப்பாக இருந் தது. தட்டுத் தடுமாறி, வீட்டை அடைந்தான்.

கலிவரதன் வீடு சென்றதும், அவனுக்கு உண்மையிலேயே காய்ச்சல் வந்துவிட்டது. கட்டி லில் அப்படியே சாய்ந்து விட் டான்.

ஊர்காரர்களெல்லாம் அவனை சூழ்ந்தபடி, "எப்படி இருந்தவன் இப்படி ஆகி விட்டானே, இவனுக்கு ஏதோ கொடிய வியாதி வந்திருக்கும் போலிருக்கிறதே... மருத்துவம் பார்க்காவிட்டால் இவன் உயிர் பிழைக்க மாட்டான் என்று நினைக்கிறேன்" என்றெல்லாம் தங்களுக்குள் பேசிக் கொண் டனர்.

ஊர்மக்கள் பேசியதை கேட்ட கலிவரதனுக்கு பயம் வந்துவிட்டது. இனி நம் உயிர் போன மாதிரிதான் என்று நினைத்துக் கொண்டான். சுற்றி இருந்த மக்களைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டு, "தயவுசெய்து ஒரு நல்ல வைத்தியரை அழைத்து வந்து என் உயிரை காப்பாற்றுங் கள்," என்று கதறினான்.

ஊர்மக்கள் தங்களுக்குள் சிரித்தவாறு, அவர்கள் முன்பே சொல்லி வைத்திருந்த வைத்தி யரை கலிவரதன் வீட்டிற்கு அழைத்து வந்தனர். வைத்திய ரும் கலிவரதனை சோதனை செய்து பார்த்துவிட்டு உதட் டைப் பிதுக்கினார்.

"தம்பி உனக்கு வந்திருப்பது எவராலும் தீர்க்க முடியாத வியாதி. இந்த வியாதிக்கு மருந்தே கண்டுபிடிக்கப்பட வில்லை. நீ கொஞ்ச நாளில் மரணம் அடைந்து விடுவாய். அதனால் நீ விரும்புவதையெல் லாம் சாப்பிட்டு விட்டு இறை வனை தியானம் செய்து கொண்டிரு... இதைத் தவிர வேற வழியில்லை," என்றார்.

கலிவரதனுக்கு வேதனை யாக இருந்தது அவன் கண் களில் தண்ணீர் தாரை தாரையாக கொட்டியது. "எந்தவித காரணமும் இல் லாமல் தனக்கு ஏன் இப்படிப் பட்ட வியாதி வர வேண்டும்?" என யோசித்தான். கிராம மக்களைத் தான் கொடு மைப்படுத்தியதின் காரண மாக அவர்களின் சாபத்தால் தமக்கு இந்த வியாதி வந்தி ருக்கும்" என்று நினைத்தான்.

அவன் உள்ளம் கடவுளை வேண்டியது.

"ஒருவேளை நான் உயிர் பிழைத்து எழுந்து விட்டால் யாருக்கும் எந்த தொல் லையும் தரமாட்டேன் என்று முடிவு செய்து கொண்டான் என்றாலும் தம் உயிரை காக்க மருந்தே இல்லை," என்று வைத்தியர் சொல்லி யதை கேட்டு அழத் தொடங் கினான்.

நாட்கள் சென்றன-

மூச்சுப் பேச்சு இல்லாமல் கலிவரதன் படுக்கையில் கிடந்தான். ஊர்மக்கள் கூடி பேசிக் கொண்டிருந்தனர்.

"எப்படியோ ஒரு படுபாவி ஒழிந்தான். இனிமேல் நம் கிராமத்திற்கு நல்ல காலம் தான்!" என்று சந்தோஷமாக பேசிக் கொண்டிருந்தனர்.

கலிவரதனுக்கு ஊர் மக்கள் பேசிக் கொள்வது மயக்க நிலையிலும் லேசாக கேட்டது. தட்டுத் தடுமாறி படுக்கையை விட்டு எழுந் தான். அவர்களைப் பார்த்து, "ஐயா நீங்கள் பேசியதை யெல்லாம் கேட்டேன். நான் உங்களுக்கு எவ்வளவு துரோகம் செய்து இருக்கிறேன் என்று இப்போதுதான் புரிகி றது. என்னை எல்லாரும் மன்னித்து விடுங்கள், நான் இந்த ஊரை விட்டே போகி றேன், இனி நீங்கள் நிம்மதி யாக இருக்கலாம், வேறு ஊருக்கு சென்று ஏதோ வேலை செய்து பிழைத்துக் கொள்கிறேன்," என்றான்.

ஊர் மக்கள் பெரியவரின் தந்திரம் பலித்ததை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர். எப்படியோ ஒரு போக்கிரியின் தொல்லையிலிருந்து தங்கள் கிராமம் விடுபட்டதை எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர்.

குட்டீஸ்... இதிலிருந்து உங்களுக்கு என்ன தெரி கிறது. மனசுல பயத்தையும், நோயையும் யாராவது சொல்லி விட்டால் அதை அப்படியே உங்க மனசு நம்பிடுது. அதன்படியே உங்கள் உடம் பும் ஆகிடுது பார்த்தீர்களா?

இதற்குத்தான் மனதை எப்போதும் தூய்மையாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்ளணும் என்பது!

(முற்றும்)

## 01.2016 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1368 -சூயுவான்ஷாங் சீனாவின் பேரரசனாக முடிசூடினான். இவனது மிங் பரம்பரை 3 நூற்றாண்டுகள் சீனாவை ஆண்டது.
- 1556 - சீனாவின் சாங்சி மாநில நிலநடுக்கத்தில் 830,000 வரையானோர் இறந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப் பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.
- 1570 - ஸ்கொட்லாந்தில் உள்நாட்டுப் போர் வெடி த்தது.
- 1639 - பெருவைச் சேர்ந்த யூதக் கவிஞர் பிரான் சிஸ்கோ மல்டொனால்டோ டி சில்வா எரியூட் டிக் கொல்லப்பட்டார்.
- 1719 - புனித உரோம் பேரரசின் கீழ் லீக்டன்ஸ் டைன் நாடு உருவாக்கப்பட்டது.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது கத்தோ லிககக் கல்லூரியான ஜோர்ஜ்டவுன் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.
- 1793 - ரஷ்யா-ரஷ்யா- போலந்தைப் பிரித்தனர்.
- 1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா மீண் டும் கைப்பற்றிக் கொண்டது.
- 1874 - விக்டோரியா மகாராணியின் மகன் எடின் பரோ கோமகன் அல்பிரட் ரஷ்யாவின் மூன் றாம் அலெக்சாண்டரின் ஒரே மகளான மரீயா அலெக்சாந்திரொவ்னாவை திருமணம் புரிந்தார்.
- 1924 - விளாடிமிர் லெனின் ஜனவரி 21 இல் இறந்த தாக சோவியத் ஒன்றியம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.
- 1937 - லியோன் ட்ரொட்ஸ்கி தலைமையில் ஜோசப் ஸ்டாலின் அரசைக் கவிழ்க்க முயன்றதாக 17 கம்யூனிஸ்டுகளின் மீது மாஸ்கோவில் விசாரணைகள் ஆரம்பமாயின.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: லிபியாவின் தலை நகர் திரிப்பொலியை நாசிகளிடமிருந்து பிரித் தானியர் கைப்பற்றினர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஆஸ்திரேலிய, மற்றும் அமெரிக்கக் கூட்டுப் படைகள் பப்புவா வில் யப்பானியப் படைகளைத் தோற்கடித்த னர். இது பசிபிக் போரில் யப்பானியரின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.
- 1950 - ஸ்ரேலின் சட்டசபை ஜெருசலேமை இஸ்ரே லின் தலைநகராக அறிவித்தது.
- 1957 - சென்னை மாநிலத்தில், தமிழ் ஆட்சி மொழி யாக அறிவிக்கப்பட்டது.
- 1973 - வியட்நாமில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் அறிவித்தார்.
- 1996 - ஜாவா நிரலாக்க மொழியின் முதற் பதிப்பு வெளியானது.
- 1998 - யாழ்ப்பாணம், புங்குடுதீவில் ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி துணை இராணுவக்குழுவின் முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கியழிக்கப் பட்டதில் அம்முகாமிலிருந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - அமெரிக்க ஊடகவியலாளர் டானியல் பேர்ள் கராச்சியில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

- 1876 - ஒட்டோ டியெல்ஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர் மனியர் (இ. 1954)
- 1907 - ஹிடெக்கி யுக்காவா, நோபல் பரிசு பெற்ற யப்பானியர் (இ. 1981)
- 1915 - ஆர்தர் லூயிஸ், நோபல் பரிசு பெற்ற பிரித் தானியர் (இ. 1991)
- 1918 - கேர்ட்ரூட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (இ. 1999)
- 1929 - ஜோன் போல்யானி, நோபல் பரிசு பெற்ற கனடியர்
- 1930 - டெரெக் வால்கொட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்

### இறப்புகள்

- 1944 - எட்வர்ட் மண்ச், நோர்வே நாட்டைச் சேர்ந்த ஓவியர் (பி. 1863)
- 1989 - சல்வடோர் டாலி, ஸ்பானிய ஓவியர் (பி. 1904)
- 2014 - எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, இலங்கை மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதி (பி. 1953)
- 2015 - அப்துல்லா, சவூதி அரேபிய மன்னர் (பி. 1924)

# சிறார்களுக்கு ஏற்புடைய வகையில் பாடவிதானங்களை தயாரியுங்கள்

## ஜனாதிபதி மைத்திரி ஆலோசனை

(கொழும்பு)



**சிறுவர் உள்ளங்களுக்கு ஏற்புடைய வகையில் பாடசாலை பாடத்திட்டங்களை தயாரிப்பதில் கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

05 மற்றும் 06 ஆம் தரங்களுக்காக தற்போது நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டங்களில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதாகவும் அதனால் பிள்ளைகள் பல அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும் பெற்றோர்களிடம் இருந்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கல்வித்துறையில் புதிய சீர்திருத்தங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். ஜனரஞ்சக பாடசாலை எண்ணக்கரு தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, சகல பிரதான பாடசாலைகளையும் ஜனரஞ்சக பாடசாலை மட்டத்திற்கு அபிவிருத்தி செய்து அப்பிரச்சினைக்கு தீர்வுகளை கண்டறிவது தொடர்பிலும் ஜனாதிபதி கல்வி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

தான் எந்தவொரு ஜனரஞ்சக பாடசாலைக்கும் எந்தவொரு பிள்ளையையும் சேர்த்துகொள்வதற்கு கடிதங்கள் வழங்கவில்லை என்றும் எல்லா பாடசாலைகளையும் ஒன்றுபோல் அபிவிருத்தி செய்து பிள்ளைகளுக்கு சம கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதே நோக்கம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதுபோன்று 5ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு பெற்றோர்களிடம் காணப்படும் போட்டித்தன்மை காரணமாக பிள்ளைகள் முகம் கொடுக்கும் அழுத்தங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, எல்லோரினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை கவனத்திற்கொண்டு அதற்கான ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

இன்று இலங்கையில் தற்கொலை செய்துகொள்ளும் விகிதம் மிக வேகமாக அதிகரித்து வருவதுடன், அதற்கு பாடசாலை கல்வியில் பிள்ளைகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் எவ்வளவு தூரம் பாதிப்பு செலுத்துகின்றது என்பது தொடர்பில் கண்டறியுமாறும் ஜனாதிபதி கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார்.

நாட்டின் இலவசக் கல்விக் கொள்கையை பலப்படுத்தி நவீன தொழில்நுட்பத்துடன் பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை பெற்றுக் கொடுப்பது புதிய அரசாங்கத்தின் நோக்கமாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அக்கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்கின்றபோது கல்வி அதிகாரிகளுக்கு முக்கிய பொறுப்பு இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பிரிவெனாக் கல்வி அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், வெற்றிடங்கள் நிலவும் பிரிவெனா பணிப்பாளர் பதவிக்கு புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கும் ஜனாதிபதி கல்வி அமைச்சிற்கு ஆலோசனை வழங்கினார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன், பல்கலைக்கழக இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எம். பந்துசேன, தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார ஆகியோரும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர். (இ)

# உதய கம்மன்பில மீது மோசடிக் குற்றச்சாட்டு

அவுஸ்திரேலிய வர்த் தகர் ஒருவரின் சொத்தை ஏமாற்றி விற்பனை செய்த தாக நாடாளுமன்ற உறுப்பி னர் உதய கம்மன்பில மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை குறித்த வர்த்தகரின் சட்ட அங்கீகாரத்தை கொண்ட எல்.ஐ. பெரேரா என்பவர் நேற்று முன்தினம் பொலிஸில் முறைப்பாடாகதெரிவித்துள்ளார்

பரோம்பில் என்ற தேயிலை தொழிற்சாலையை போலியான ஆவணங்களை தயாரித்து உதய கம்மன்பில வேறு ஒரு நிறுவனத்துக்கு 190 மில்லியன் ரூபாய்களுக்கு விற்பனை செய்துவிட்டதாக முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பான் ஏசியா வங்கியின் 110 மில்லியன் ரூபா பங்குகளை முறை கேடாக விற்பனை செய்துள் ளதாக கம்மன்பிலவின் மீது சுமததப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே புதிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய இரண்டு பொலிஸ அதிகாரிகள் அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளனர்.

அதேநேரம் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க அவுஸ்திரேலிய வர்த்தகரான சாதிக் என்பவர் இலங்கைக்கு வர தயாராகவுள்ளதாகவும் முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (இ)

# இராஜினாமா செய்ய ஹசன்அலி தீர்மானம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி பதவியை இராஜினாமா செய்யத் தீர்மானித்துள் ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஏ.ஆர்.ஏ. ஹாபிஸ் பதவியை இராஜினாமா செய்ததன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்காக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கை நியமிக்க கட்சித் தலைமை எடுத்த தீர்மானத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு இரண்டு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்பதவிகள்வழங்கப்பட்டன.

இந்த பதவிகளுக்காக கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலியையும் கட்சிக்காக அர்ப்பணிப்பு செய்த ஒருவரையும் நியமிக்க கட்சியின் அதி உயர் பீடம் தீர்மானித்திருந்தது.

தம்மை நியமிக்காது எம்.எஸ். தௌபீக்கை நியமித்தமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு பதவியை இராஜினாமா செய்ய ஹசன் அலி தீர்மானித்துள்ளதாக சிங்களப பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 611

**கீர்த்து கரன்**




**கார்த்தி நாதன்**




**தேவன் விது**




**நிவா நிவாஷ்**



**ஜெயசந்திரகாந்தன்**



**தஷா நுஷன்**

என் தாத்தா பூமியை தோண்டும் போது அவருக்கு நிறைய தங்கம் கிடைத்தது.

என் அப்பா தோண்டும் போது அவருக்கு நிறைய தண்ணீர் கிடைத்தது.

நான் தோண்டும் போது நிறைய கண்ணிவெடிகள் கிடைத்தது.

என் மகன் தோண்டும் போது அவனுக்கு நிறைய எலும்புக்கூடுகள் கிடைக்கும்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வேலைவாய்ப்பின்றி இருக்கும் முன்னாள் போராளிகள்



இலங்கையில் பல பத்தாண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது முடிவடைந்து ஏழு ஆண்டுகளாகிய போதிலும், பெரும்பாலான முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் தற்போதும் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு போராட்டங்களைச் சந்திக்கின்றனர்.

இவர்கள் வாழும் பிரதேசங்களில் பல பில்லியன் டொலர்களில் முதலீடு மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவர்கள் தமக்கான தொழிலைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தால் முன்னாள் தமிழ்ப் புலிகளுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகள் தொடர்பான கட்டாய 'புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தில்' சிவலிங்கம் ருவேந்திரதாசும் மூன்று ஆண்டுகள் பயிற்சிகள் பெற்றிருந்தார். ஆனால் தற்போது மீண்டும் அவர் தனது பொருளாதார நெருக்கடியால் துன்பப்படுகிறார்.

'போர் இடம்பெற்ற போது நான் எனக்குத் தேவையான பொருட்களை புலிகளிடமிருந்தாவது பெற்றுக் கொள்ள முடிந்தது' என சிவலிங்கம் ருவேந்திரதாஸ் தெரிவித்துள்ளார்.

இவர் தச்சுத் தொழிலுக்கான பயிற்சியைப் பெற்றிருந்தாலும் கூட, ருவேந்திரதாஸ் தனது சொந்த இடமான வள்ளிபுனம் கிராமத்திற்குத் திரும்பிய போது தச்சுத் தொழிலைச் செய்வது என்பது சாத்தியமற்றதாக இருந்தது. வள்ளிபுனமானது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து பின்னர் விடுவிக்கப்பட்ட கிராமமாகும்.

'தற்போது வள்ளிபுனத்தினத்தில் நெடுஞ்சாலைகள், புதிய தொடருந்துப் பாதைகள், புதிய மின்சார இணைப்புக்கள், புதிய தொலைபேசி இணைப்புக்கள் என்பன காணப்படுகின்றன. ஆனால் தொழில் வாய்ப்புக்கள் எதுவுமில்லை' என மூன்று பிள்ளைகளின் தகப்பனாரான ருவேந்திரதாஸ் தெரிவித்தார். இவர் தற்போது கோழி வளர்ப்பு மற்றும் கூலித் தொழில் மூலம் தனது குடும்பத்தைப் பராமரித்து வருகிறார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் 3.5 பில்லியன் டொலர் பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்களில் பாரிய கட்டுமானத் திட்டங்கள் அதாவது வீதிகள், நெடுஞ்சாலைகள், மின்சாரம் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. முன்னாள் போர் வலயங்களில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்து வதன் ஊடாக மனிணக்கத்தை மேற்கொளவதற்காகவே இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

'பெருமளவான நிதி ஒதுக்கப்பட்டு முன்னாள் போர் வலயத்தில் முன்னெடுக்கப்படும் கட்டுமானத் திட்டங்கள் மூலம் நாங்கள் சுகவாழ்விற்கான எமது உறுதிப்பாட்டைக் காண்பிக்கின்றோம்' என 2011 இல் வடக்கில் புதிய தொடருந்துப் பாதையை அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ர்ராஜபக்ஷ தெரிவித்தார்.

'எமது நாட்டிற்குப் புத்துயிர் அளிப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்கிறோம். இதன் மூலம் ஒட்டுமொத்த நாட்டையும் ஒன்றிணைக்கும் பயணத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்' என முன்னாள் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

போர் வலயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் இவை அனைத்தும் தொழிற் சந்தையை மேம்படுத்தத் தவறியுள்ளன என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பெருமளவான நிதி கட்டுமானத் திட்டங்களை நோக்கி ஒதுக்கப்படுவதும், கிராமங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு வரிச் சலுகைகளை வழங்கி அவற்றுக்கு உந்துசக்தி வழங்காமையுமே இவ்வாறான தொழில் வாய்ப்புக்கள் குறைவடைந்தமைக்கான பிரதான காரணமாகும் என ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறைந்த வட்டியுடனான கடன்களை வழங்குதல் மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குதல் போன்ற பல்வேறு வழிகளின் மூலம் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் சுயதொழில்களை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களையும் இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் வழங்கத் தவறியுள்ளன.

'போரால் பாதிக்கப்பட்ட வலயத்தில் தனியார் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி, தொழிநுட்பம் மற்றும் சந்தை வாய்ப்பு போன்றவற்றின் மூலம் ஆதரவளித்து அவற்றை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்' என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முதன்மைப் பொருளியலாளர் அனுஸ்கா விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

போர் வலயத்தில் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கிடையில் பாரிய கட்டுமானத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இக்காலப் பகுதியில் இலங்கை முழுமையும் 422,111 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டதாகவும் இவற்றுள் 5.8 சதவீதம் அதாவது 24,303 தொழில் வாய்ப்புக்கள் மட்டுமே வடக்கு மாகாணத்தில் வழங்கப்பட்டதாகவும் மத்திய வங்கியின் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

பொதுத் திட்டங்களில் இலங்கை இராணுவ வீரர்களையே முன்னாள் அரசாங்கம் உள்வாங்கியதாக பருத்தித்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவரான முத்துக் கிருஸ்ணா சர்வானந்தன் தெரிவித்துள்ளார். உளளூர் மக்கள் குறிப்பாக இளையோர்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவதை திட்டமிட்டுத் தட்டிக்கழிக்கின்ற இலங்கையின் மூலோபாயமாகவே இது நோக்கப்பட முடியும்.

12 ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வுப் பயிற்சிகளை நிறைவு செய்து அவர்களது குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் அதிகமானோர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இலங்கையின் புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவர்களுள் 3000 பேர் மட்டுமே நிரந்தர தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இவர்களுள் அதிகமானோர் இலங்கை பொலிஸ் துறையின் கீழ் செயற்படும் சிவில் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றுகிறார்கள்.

வடக்கு மாகாணத்தில் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகியன காணப்படுகின்றன. இங்கு தொழில் வாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையும் மிகவும் அதிகமாகும். தேசிய வேலை வாய்ப்பற்றோரின் வீதமானது 4.3 ஆகவும் கிளிநொச்சியின் வேலை வாய்ப்பற்றோரின் சதவீதம் 7.6 ஆகவும் காணப்படுவதாக தேசிய புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன.

வடக்கு மாகாணத்தின் வேலை வாய்ப்பற்றோர் சதவீதம் 5.3 ஆகவும், கிழக்கு மாகாணத்தில் இது 4.9 சதவீதமாகவும் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த போரால் பாதிக்கப்பட்ட பிறிதொரு மாகாணமாகும். இவ்விரு மாகாணங்களினதும் வேலை வாய்ப்பற்றோர் வீதம் மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் அதிகமாகும்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை மேம்படுத்த வேண்டும் என துறைசார் வல்லுனர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். 'இப்பிராந்தியங்களில் புதிய தனியார் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும் போது இவற்றின் உள்ளூர் பொருளாதாரமும் பலம் பெறும்' என இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் விஜேயசிங்க தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இலங்கையின் தற்போதைய மைத்திரி அரசாங்கம் வாக்குறுதி வழங்கிய போதிலும் இதற்கான பணிகள் இன்னமும் முன்னெடுக்கப்படவில்லை.

'நாங்கள் வடக்கு மற்றும் கிழக்கில் பாரிய தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்க விரும்புகிறோம். இங்குள்ள மக்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்கும் அதேவேளையில் வெளிநாட்டு முதலீடுகளையும் உள்வாங்குவதற்கான திட்டங்களைக் கொண்டுள்ளோம். கடன் மற்றும் ஏனைய மானிய உதவிகளையும் வழங்குவதற்கான திட்டங்கள் உள்ளன' என இலங்கை அரசாங்கப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

போரில் பங்குகொண்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் என ருபேந்திரதாஸ் நம்புகிறார்.

இவரைப் போன்ற முன்னாள் போராளிகள் தமக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமங்களைச் சந்திக்கின்றனர். 'நாங்கள் கறை படிந்த வாழ்வையே வாழ்கிறோம்' என ருவேந்திரதாஸ் மிகவும் வேதனையுடன் தெரிவித்தார்.

**ஆங்கில மூலம்- அமந்த பெரேரா**
**மொழியாக்கம்- நித்திபாரதி**


# சைவ மக்களால் சிறப்பாக போற்றப்படும் தைப்பூசம்

சைவமக்களால் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும் விரத நாளாக தைப்பூச விரதம் அமைகின்றது. தை மாதத்திலே இடம் பெறும் பூச நட்சத்திர தினமன்று தைப்பூச விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பூசம் என்பது பஞ்சாங்கம் குறிப்பிடும் 27 நட்சத்திரங்களில் எட்டாவதாக விளங்குகின்றது. தை மாத்தில் வரும் பூசம் என்பதனால் தைப்பூசம் என அழைக கப்படுகின்றது. இந் நாளினை புண்ணிய நாளாக இந்துக்கள் போற்றுகின்றார்கள்.

தைப்பூச நன்னாளானது பெரும்பாலும் பௌர்ணமியுடன் கூடிய நாளாக இருக்கும் தேவர்களின் குருவாக விளங்கும் பிருகஸ்பதி பூச நட்சத்திரத்தின் அதிபதியாக விளங்குகின்றார். அவர் அறிவின் தேவதையாகவும் இருப்பதனால் தைப்பூச 10 தினத்தில் விரதமிருந்து அவரை வணங்கும் போது அருள் எமக்கு கிடைக்கின்றது.

தைப்பூச தினமானது நடரா. ஜப்பெருமான் அம்பிகை, முருகன் ஆகியோருக்கு உகந்த நாளாகவும் போற்றப்படுகின்றது. இந் நாளானது சிவசக்தி ஐக்கியத்தினை காட்டும் திருநாளாகவும் போற்றப்படுகின்றது. சிறப்பாக முருகப்பெருமானுக்குரிய விசேடமான நாளாகவும் விளங்குகின்றது. தைப்பூச திருநாளானது உலக சிருஷ்டியின் ஆரம்ப நாள்

**நாளையதின தைப்பூச திருவிழாவினை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**



எனவும் பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் காணும்படி நடராஜப்பெருமான் சிவதாண்டவம் ஆடிய நாளாகவும் வாயு வருணன் அக்கினி ஆகிய தேவர்களும் சிவபெருமானின் அதீத சக்தியை உணர்ந்த நாளாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தைப்பூச திருநாளிலே எம்பெருமானாகிய நடராஜப்பெருமான் சிவகாமி சுந்தரி அம்மையோடு ஆனந்த நடனமாடுவதாக புராணங்கள் கூறுகின்றன. கனக சபையாகிய சிதம்பரத்திலே ஆனந்த நடனம் புரியும் தில்லைக்கூத்தன் நடராஜப் பெருமானை நினைத்து சைவ சமயிகள் ஃதைப்பூசத் திருநாளில் விரதமிருப்பார்கள்.

தைப்பூச நாளின் சிறப்புப் பற்றி ஆறுமுகநாவலர் குறிப்பிடுகின்ற போது சிவனார் கனகசபையான ஞான சபையிலே உமையம்மையுடன் ஆனந்தத் தாண்டவம் செய்த இத் தைப்பூச திருநாளிலே அன்று வியாழக்கிழமையும் கூடிவரின் அச் சித்தயோக தினத்திலே ஆயிரம் தோள் களையுடைய வானசுரன் குடமுழா ஒலிக்க ஆயிரம் முகமுடைய பானு கம்பர் கீத ஒலியும் நாதமெழுப்ப ஞான சபைதன்னில் சிவபெருமான் உமையம்மையுடன் ஆனந்த நிருத்தம் செய்தருளினார் எனக் குறிப்பிடுகின்றார்.

தைப்பூச நன்னாளின் சிறப்புப் பற்றி திருஞான சம்பந்தப்பெருமான் தனது தேவாரப்பாடலில் குறிப்பிடும் போது

"மைப்பூசும் ஒண்கண் மட நல்லார் மாமயிலைக்
கைப்பூசும் நிற்றான் பாலீச் சரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் ஒன்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்". எனக் குறிப்பிடுகின்றார்.

இத்தகு சிறப்பிற்குரிய தைப்பூச நன்னாளிலே விரதம் அனுஷ்டிப்பதன் ஊடாக இம்மை மறுமை இன்பங்களினை பெற்று உய்யலாம். எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விரதமானது அனுஷ்டிக்கப்படுகின்ற முறைமையை நோக்கும் போ்து அதிகாலை துயில் எழும்பி புனித நீராடி ஆசாரத்துடன் ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். காலை உணவை விடுத்து நண்பகல் வேளையில் புது நெல்லரிச் சாதம் உட் கொள்ள வேண்டும். இரவு வேளையில் பலகாரம் போன்ற உணவுகளினை உண்ணலாம்.

இந் நனனாளில் புது நெல்லெடுத்து எம்பெருமானுக்கு பிரசாதம் செய்து நிவேதித்தல் இந்நாளுக்குரிய சிறப்பம்சமாகும். இந் நிகழ்வினை எமது ஆன்றோர்கள் புதிரெடுத்தல், புதிருண்ணல் என்று அழைப்பார்கள்.

தைப்பூச நன்னாளிலே விரதமனுஷ்டித்து புண்ணிய நதிகளிலே நீராடினால் பாவம நீங்கி மிகுந்த நற்பலன் கிட்டும் என்பார்கள்.

தைப்பூச நாளிலே அத் தினத்தினை விசேட நாளாகக் கொண்டு ஏடு தொடக்கல, புதிதெடுத்தல் ,புதிதுண்ணல், பெண் குழந்தைகளுக்கு காது குத்துதல் ,மூக்குக் குத்துதல் போன்ற நற்காரியங்களில் ஈடுபடுகின்றார்கள்.

இத் தைப்பூச தினமானது எமது பிரதேசத்து முருகன் ஆலயங்களில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வகின்றமை சிறப்பம்சமாகும். இத்தினத்திலே விரதமிருந்து எம்பெருமானாகிய இறை பரம்பொருளினை வணங்கி வாழ்வின் சுகங்களினை பெற்றுக் கொள வோமாக.

எஸ்.ரி. குமரன்
சைவப்புலவர்
சைவசித்தாந்த பண்டிதர்

## குமார் குணரத்னம் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(கொழும்பு)

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் குமார் குணரதனம் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குணரத்னம் நேறறு கேகாலை நீதவான் நீதிமனறத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறு உத்தரவிடபபட்டுள ளது.

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் குமார் குணரத்னம் கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி கேகாலை அக்குருவெல்ல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குமார் குணரத்னத்திற்கு எதிரான குற்றச்சாட்டு பிணை வழங்க முடியாத குற்றச்சாட்டு இல்லை என சுட்டிக்காட்டும் அரசியல் அவதானிகள், அரசியல் ரீதியாக பழிவாங்குவதற்காகவே அவர் தொடர்ந்தும் இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளனர்.

குணரட்னத்திற்கு எதிரான இந்த அரசியல் செயறபாடுகளின் பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியும் இருப்பதாக கூறபபடுகிறது.(இ)

# குமார் குணரத்னத்தை ஏன் விடுதலை செய்ய முடியாது

## விக்ரமபாகு கருணாரத்ன கேள்வி

கடவுச்சீட்டு பிரச்சினை காரணமாக குமார் குணரத்னம் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளார். இது சாதாரண கடவுச்சீட்டு பிரச். சினையாகும். இதைவிடவும் கடவுச்சீட்டில் பாரிய மோசடிகளை மேற்கொண்டவர்கள் இருக்கின்றனர். விமல் வீரவன்சவும் கடவுச்சீட்டு பிரச்சினையில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டார். குமார் குணரத்னம் தொடர்ந்து சிறையிலடைக்கப்படுவதற்கான காரணம் தெரியாது என நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

முன்னிலை சோசலிச கட்சி கொழும்பில் நடத்திய பேரணி மீது தண்ணீர் பீச்சியடிக்கப்பட்டமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஜனநாயக நாடொன்றில் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மேற்கொள்ளப்படுவதை யாராலும் தடுக்க முடியாது. அந்த வகையில் முன்னிலை சோசலிச கட்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள தங்கள் தலைவர் குமார் குணரத்னத்தை விடுதலை செய்யக் கோரி பேரணி ஒன்றில் ஈடுபட்டிருந்தது.

திடீரென பேரணியில் வந்தவர்கள் அங்கு போடப்பட்ட தடைகளைஉடைத்துக்கொண்டு செல்ல முற்பட்டபோது பொலிஸார் அவர்கள் மீது நீர்த் தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்த சம்பவம் அரசாங்கம் அந்த கட்சியுடன் இணைந்து மேற்கொண்டதோர் நிகழ்வாகவே தோன்றுகின்றது. ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்க அரசியலில் உலகை வென்றவர். அவர் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் மருமகனாக இருந்தாலும் ஜே.ஆரின பெரிய தந்தை போன்றே செயற்படுகிறார். அவர் முன்னிலை சோசலிச கட்சியை அழைத்து நீங்கள் பேரணியாக செல்லுங்கள். நாங்கள் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை மேற்கொள்கின்றோம். அவ்வாறெனில் உங்களுக்கும் பிரச்சினை இல்லை எங்களுக்கும் பிரச்சினை இல்லை என்று சொல்லியிருப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## போலியான 13 பிறப்பு சான்றிதழ் பத்திரம் வைத்திருந்தவர் கைது!

போலியான 13 பிறப்புச் சான்றிதழ் பத்திரம் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அலவத்துகொட, அகுரன பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 13 போலி பிறப்பு சான்றிதழ்களுடன் போலியாக தயாரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர் மாத்தளை பிரதேசத்தில் குடியிருக்கும் 55 வயதுடைய ஒருவர் என தெரியவந்துள்ளது. (இ)

## தங்க மாலையை கொள்ளையடித்த இளைஞன் கைது

பெண் ஒருவரின் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க மாலை ஒன்றை கொளளையடித்து சென்ற நபரை குருநாகல் அலவ்வ பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள ளனர.

அலவ்வ பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள ளார். சந்தேக நபரை பொல்கஹவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த அலவ்வ பொலிஸார நடவடிககை எடுத்துள்ளனர். (இ)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:20<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5456 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 52செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:BDS, MDS/பல் வைத்தியர் லண்டன் NOT PR<br>தொ.இ: G/5463 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 24செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: சொந்ததொழில்<br>தொ.இ: B/5457 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 48<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:B.COM<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5467 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 31செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BBA/கணக்காளர் ஓமான்<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/5464 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 23 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:கணக்காளர்<br>தொ.இ: G/5468 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 54செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்பொறியியலாளர் USA<br>தொ.இ: B/5465 | பிறப்பு: 1983RC<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 36செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/5469 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 08.01.2016-27.07.2017 வரை

***எட்டில் ராகு வருகிறது! வழிபாடு வெற்றியைத் தந்திடும்! கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்த வேண்டும் என்று கூறும் மகர இராசி நேயர்களே!***

## எட்டில் ராகு வருகிறது! வழிபாடு வெற்றியைத் தந்திடும்!

உங்கள் ராசிநாதன் சனி 'ஆயுள் காரகன்' என்று வர்ணிக்கப்படுபவர். எந்த வேலையையும் யோசித்தே ஏற்றுக் கொள்வீர்கள். வேகத்தைக் காட்டிலும், விவேகம்தான் உங்களுக்கு அதிகம். பொல்லாதவர்களைக்கூட நல்லவர்களாக மாற்றும் ஆற்றல் உங்கள் பேச்சிற்கு உண்டு.

பாதி வயதிற்கு மேல் தான் பலவித சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். பொதுநலனில் அதிக அக்கறை காட்டும் நீங்கள் மதிப்பையும், மரியாதையையும் இரு கண்களாக நினைப்பீர்கள். யார் எதைச் சொனனாலும் ஏன், எப்படி என்ற கேள்வி உங்களிடமிருந்து வந்து கொண்டே இருக்கும்.

வந்த விருந்தினர்களை வரவேற்பால் திணறடிப்பீர்கள். சொந்தம், சுற்றங்களின் பகைக்கும் ஆளாவீர்கள். என்ன நடந்தாலும் சரி அதை ஏற்றுக் கொள்வோம் என்று முடிவெடுத்து விடுவீர்கள். கற்றவர்களுக்கு மத்தியில் உங்கள் பேச்சு எடுபடும். ஆனால் பெற்றவர்களுக்கு மத்தியில் பேசும் பொழுது, போராடித்தான் சொல்லைச் செயலாக்க இயலும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சியால் எப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்படும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**விரயங்களை அதிகரிக்க வைக்கும் எட்டாமிட ராகு! வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இரண்டாமிடத்து கேது!**

இதுவரை கன்னி ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மீன ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 8.1.2016 அன்று பின்னோக்கி வந்து பலவித மாற்றங்களை உங்களுக்கு வழங்கப் போகிறார்கள். ராகுவால் எண்ணற்ற விரயங்கள் ஏற்படலாம். எனவே கூடுதல் கவனம் செலுத்தி வாழ்க்கை நடத்துவது நல்லது.

வாக்கு ஸ்தான கேதுவால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம் தான். பின் விளைவைச் சிந்திக்காமல் முதலில் பேசிவிட்டு, 'ஏன் இப்படிப் பேசினோம்?' என்று பின்னர் வருத்தப்படுவீர்கள். உத்தியோகம், தொழிலில் அமைதியைக் கடைப்பிடிப்பது நல்லது. உடன் பணிபுரிபவர்களால் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம். இதுபோன்ற காலங்களில் ராகு- கேதுவிற்கு, முறையாக யோகபலம் பெற்ற நாளில், உங்கள் ராசிக்கு அனுகூலம் தரும் திருக்கோவில்களில், முறைப்படி சர்ப்பசாந்திப் பரிகாரங்களைச் செய்துகொள்வது நல்லது.


இந்த ராகுப் பெயர்ச்சியின் விளைவாக ஒருசில காரியங்களை ஒரு முறைக்கு இருமுறை செயயும் சூழ்நிலை உருவாகலாம். நினைத்த நேரத்தில் நினைத்தபடி செயறபட முடிவில்லையே என்று கவலைப்படுவீர்கள். உடன் பிறப்புகளின் வழியிலும், உற்றார், உறவினர்களின் வழியிலும் ஒரு சாரார் பாசமாக இருப்பர்.

எதைச் செய்தாலும் இறைவழிபாட்டை மேற்கொண்டு அதன்பிறகு காரியத்தைத் தொடங்கினால்தான் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும். சம்பளம் போதுமானதாக இல்லையே என்று ஒருசிலர் கவலைப் படுவர். மனைவி ஒத்துவரவில்லையே என்ற சிலர் கவலைப்படுவர். குழந்தைகளின் குணம் சரியில்லாமல் போகிறதே என்று ஒருசிலர் கவலைப்படுவர். ஆரோக்கியப் பாதிப்பாலும் கவலைப்பட நேரிடலாம். கொடுக்கல்-வாங்கல்களில் சிக்கல்கள் வந்துவிட்டதே என்று ஒரு சிலர் கவலைப்படுவர். கூட்டாளிகள் விலகி விட்டார்களே என்று ஒரு சிலர் வருத்தப்படலாம். இப்படி ஏதேனும் ஒரு வருத்தத்தை அஷ்டமத்து ராகு வரவழைத்துக் கொடுக்கலாம். இருந்தாலும், நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. விபரீத ராஜயோகத்தை ஏற்படுத்தும் சனியோடு அது இணைந்திருப்பதால் திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

திடீர், திடீரென தனலாபம் வந்து சேரும். தெய்வப்பற்று மிக்கவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் தீங்குகள் விலகிச் செல்லும். தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் தக்க துணையாக வைத்துக் கொள்ளுங்கள். சாதுரியமான பேச்சால் சண்டை சச்சரவைத தீர்த்துக் கொள்ளுங்கள். அன்பை விதையுங்கள். ஆனந்தப் பயிரை அறுவடை செய்யுங்கள்.

**என்ன செய்யும் இந்த இரண்டாமிடத்து கேது?**

இதுவரை மூன்றாமிடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் இப்போது இரண்டாமிடத்திற்கு வருகிறார். 2 ஆம் இடம் என்பது வாக்கு, தனம், குடும்பம் ஆகிய வற்றைக் குறிக்கும் இடமாகும். எனவே



கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா? என்பது சந்தேகம்தான். யாருக்கேனும் வாக்குறுதியளித்திருந்தால் அதை அரும்பாடுபட்டுத்தான் நிறைவேற்ற இயலும். கோபம் அதிகரிக்கும் காலம் இது. எனவே எந்த அளவுக்கு கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயறபடுகிறீர்களோ அவ்வளவு நல்லது. நிறையப் பகை உருவாகலாம். மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயறபடுவது நல்லது. விரயங்கள் கூடுதலாக இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குரலுக்குச் செவி சாய்க்க மறுப்பர். சிலரின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சிலர் பெரிய சிக்கலுக்கு ஆளாக நேரிடும். எனவே, 'தான் உண்டு தன் வேலை உண்டு' என்று இருப்பதே நல்லது.

வீடு கட்டும் முயற்சி பாதியில் நின்றாலும் ஒரு வழியாக முடிவடைந்து விடும். அலைச்சல் கூடும். உறவினர்களுக்காக இவ்வளவு பாடுபட்டும் நம்மை உதாசீனபடுத்தி விட்டார்களே என்று கூட நினை க்க நேரிடும்.

வாங்கல், கொடுக்கல்களிலும் சில சமயங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். பிறருக்கு பொறுப்பு சொல்வதால் பிரச்சினைகள் உருவாகலாம். பெருந் தொகை வாங்கும் போதும், கூடுதல் கவனத்துடன் செயறபடுவது நல்லது. நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் உங்களிடமே திரும்பி வரலாம். எனவே மனக்குழப்பம் கூடும்.

வரவைவிட செலவு இருமடங்காகும். இந் நேரத்தில் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதே நல்லது. வீடு கட்டும் பணியைத் தொடங்கலாம். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் அமைப்பு சிலருக்கு கிடைக்கும். வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். எனவே பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்கள் வாங்குவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க, அனுசரிக்கும் குணம்தான் தேவை. வேலைப்பளு கூடும். சொந்த வேலை எதையும் பார்க்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

**பாதசார அடிப்படையில் ராகு தரும் பலன்கள்!**

ராகு பகவான் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 10.3.2016 வரை): மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலுமா? என்பது சந்தேகம் தான். விரயங்கள் கூடுதலாக இருக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பொருளாதாரப் பற்றாக்குறையின் காரணமாகவும் ஒருசிலர் கடன் தொல்லைக்கு ஆளாக நேரிடலாம். குடும்பத்தில் குழப்பங்களும், மனஅமைதிக் குறைவும் ஏற்படலாம். அருகில் உள்ளவர்களை அனுசரித்துக் கொள்ள இயலும். பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கலாம். துர்க்கை வழிபாடு துயரம் போக்கும்.

ராகு சுக்ரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (11.3.2016 முதல் 16.11.2016 வரை) ஓரளவு நல்ல பலன்கள் வந்து சேரும். பிள்ளைகள் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பிரச்சினைகளிலிருந்து விடுபடும் சூழ்நிலை உண்டு. தொழிலிலிருந்த தொய்வு நிலை மாறும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும. ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

ராகு பகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (17.11.2016 முதல் 26.7.2017 வரை) எதிர்ப்புகள் அதிகரிக்கும். நீங்கள் பிறருக்கு நன்மையே செய்தாலும் அது தீமையாகவே தெரியும். வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள், மின் சாதனங்களை வாங்க உகந்த நேரமிது. அடகு வைத்து மீட்ட நகைகளை மீண்டும் அடகு வைக்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும்.




**பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!**

கேது பகவான் குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (8.1.2016 முதல் 13.7.2016 வரை) சகோதர ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். அவர்களது இல்லத்தில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். வரவு திருப்திகரமாக இருக்கும். திருமண முயற்சி வெற்றி பெறும். சீமந்தம், மணி விழா நடைபெற வாய்ப்பு கை கூடி வரும். ஆனமிகப் பயணங்கள் அதிகரிக்கும். நல்லவர்களின் நட்பு கிட்டும்.

கேது பகவான் ராகு சாரத்தில் சஞ்சரிக்கும் போது (14.7.2016 முதல் 22.3.2017 வரை) அதிக விழிப்புணர்ச்சியோடு செயறபடுவது நல்லது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். மருத்துவச் செலவுகள் கூடலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நலக் குறைபாடு ஏற்படுகிறதே

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

என்று அங்கலாய்ப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை. வீடு மாற்றங்கள் ஏற்படலாம். சுயஜாதக அடிப்படையில் திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடு, பரிகாரங்கள், குலதெய்வ வழிபாடுகளைச் செய்வதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள இயலும்.

கேது பகவான் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (23.3.2017 முதல 26.7.2017 வரை) ஓரளவு நற் பலன்கள் நடைபெறும். இடம், பூமியால் இலாபம் உண்டு. வீடு கட்டும் முயற்சி அல்லது வீடு வாங்கும் முயற்சி கை கூடும். பயணங்களால் பலன் உண்டு. சகோதர உறவில் இருந்த விரிசல் மறையும். தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

எட்டாமிடத்து ராகுவால் இனிய பலன்கள் கிடைக்கவும், இரண்டாமிடத்து கேதுவால் இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறவும், சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானை வழிபட்டு வருவதோடு, சங்கடஹர சதுர்த்தியன்று விரதமிருந்து ஆனைமுகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. வளர்ச்சியும் கூடும்.

**(நாளை கும்பம்)**

தவறுகளை ஒப்புக் கொள்ளும் துணிவும், திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இருவழிகள் – லெனின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புலம்பெயர் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட அழுத்தம் தேவை

இனப்பிரச்சினைக்கான தீர்வு, அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் என்ற விடயங்கள் இந்த ஆண்டின் பேசுபடு பொருளாகியுள்ளன.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக உலக நாடுகள் இலங்கை அரசுக்கு சில கட்டாய அறிவுரைகளை வழங்கியுள்ளன.

இவற்றை நிறைவேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. இதில் ஒன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விடயமாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறினால், அடுத்த ஜெனிவா கூட்டத்தொடரில் உலக நாடுகளைச் சமாளிப்பது முடியாத காரியம் என்ற அடிப்படையில், எப்பாடுபட்டாகிலும் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது.

இதன் காரணமாக 2016ஆம் ஆண்டில் ஏதோ ஒரு வகையில் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாகுதல் என்ற விடயம் முன்னெடுக்கப்படுகிறது.

இதில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை தீர்மானிக்கின்ற தமிழ் சக்திகளை தம் வசப்படுத்துவதில் அரசின் இராஜதந்திரம் கடுமையாக வேலை செய்யத் தலைப்பட்டுள்ளது.

அதாவது தமிழ் அரசியல் தலைமையை தம் வசப்படுத்தினால் எல்லாம் சரியாகி விடும் என்ற நினைப்போடு இலங்கை அரசின் காய்நகர்த்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இக் காய்நகர்த்தலில் எங்கள் அரசியல் தலைமையைச் சேர்ந்த சிலர் சிக்குண்டுவிட்டனர் என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும்.

தமிழ் அரசியல் தலைமையை தம்வசம் வளைத்துப்போட்டு, தருவதை வாங்குங்கள் என்று சொல்வதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசின் இந்த ஏற்பாட்டை உடைக்கின்ற ஒரு சக்தியாக தமிழ் மக்கள் பேரவை உதயமாகியது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு இப்படியாகத்தான் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு தமிழர் தரப்பில் எவரும் இல்லை என்ற கட்டத்தில் தமிழ் மக்கள் பேரவையின் உதயம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தவுள்ளதென்பதை அண்மைக் கால நிகழ்வுகள் உறுதிசெய்துள்ளன.

யுத்தத்தால் தமிழ் மக்கள் சந்தித்த இழப்புக்கள், சொத்தழிவுகள், இடப்பெயர்வுகள் என்ற மிகப் பெரியதொரு துன்பப்பட்டியல் எங்கள் கண்முன் இருக்கின்றபோது, எந்தத் தமிழ் அரசியல் தலைமையும் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது.

எனவே அனைத்துத் தமிழ்த் தரப்பும் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும் என்பது இங்கு முக்கியமானது. இவ்விடத்தில்தான் எங்கள் புலம்பெயர் உறவுகளின் ஒன்றுபட்ட குரல் தேவைப்படுகிறது.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் தமிழ் மக்களுக்கு நடந்த பேரழிவுகளை வெளிப்படுத்தி சர்வதேசத்தின் பார்வையை இலங்கை மீது திசை திருப்பியவர்கள் எங்கள் புலம்பெயர் உறவுகள்.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதற்கான ஆயத்தங்கள் நடக்கின்ற இவ்வேளையில், எங்கள் புலம்பெயர் உறவுகள் உலக நாடுகள் மூலமாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதையும் தமிழினம் ஒன்றுபட்டு தமது உரிமையைக் கேட்பதற்கு வலியுறுத்தவும் முன்வர வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை.

# இருவிபத்துக்களில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்.நகர்ப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் பருத்தித்துறையை சேர்ந்த கிருபாகரன் கபில்ராஜ் (வயது 22) என்ற இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளானதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

யாழ்நகரில் இடம்பெற்ற பிறிதொரு விபத்தில் வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்யூட் இன் மறாவில் (வயது 81) என்ற வயோதிபர் படுகாயமடைந்துள்ளார்.

வயோதிபர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பேருந்தும் விபத்துக்குள்ளானதில் இவ் விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான இருவரும் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-12,30)

# இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீகந்த சுவாமி கோவில் தைப்பூச இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-5)

# இராஜ கோபுரத்துக்கு அடிக்கல் நாட்டல் வைபவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான் தெற்கு வாயிலில் இராஜகோபுரம் அமைத்தலுக்கான அடிக்கல் நாட்டல் வைபவமும் தைப் பூசத் திரு நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)

# ஆலய திருநாள்

நாவாந்துறை கண்ணாபுரம், புனிதயோசப்வாஸ்ஆலய திருநாள் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள திருச்செபமாலையைத் தொடர்ந்து திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (இ-5)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாராவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் மாணவர் கௌரவிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ் வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

2015இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மற்றும் க.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களே அன்றைய தினம் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-5)

# நூல் அறிமுக விழா

(தும்பளை)

பருத்தித்துறை ஞானாலயத்தில் புதிய சொல் என்ற நூல் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது நூல் பற்றிய கருத்துரைகளை எழுத்தாளர் ந.மயூரரூபன் மற்றும் சி.சித்திராகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5,19)

# புனரமைப்பு இன்றி நகுலேஸ்வரா வீதி

(யாழ்ப்பாணம்)

வல்லை – அராலி வீதியில் இருந்து கீரிமலை சந்திவரை செல்லும் நகுலேஸ்வரா வீதியானது பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. குறித்த வீதியூடாக விவசாயிகள் பாரமான பொருட்களுடன் போக்குவரத்து செய்யும்போது பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பலர் இந்த வீதி ஊடாக பெரும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதியில் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் குறித்த வீதி இதுவரை புனரமைப்பு செய்யப்படவில்லை எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இதைகவனத்தில்கொண்டு விரைவில் இந்த வீதியை புனரமைப்பு செய்து தரும்படி பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 23 ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அந்த வகையில் இன்று சனிக்கிழமை **யாழ்.பிரதேசத்தில** மயிலங்காடு, மடம் வீதி, கல்வியங்காடு இராமலிங்கம் சந்தி, கல்வியங்காடு ஆடியபாதம் வீதி, கோப்பாய் பொலிஸ் நிலையம், GPS றோட், பாற்பண்ணை, முடமாவடி கிளிகடை சந்தி, திருநெல்வேலி சந்தை, யாழ் பல்கலைக் கழக கலைப்பீடம், குப்பிளான், உடுப்பிட்டி V.C நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டை மானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** நாவற்காடு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59வது படைப்பிரிவு (14E SR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** சாம்பல் தோட்டம்கிராமம் ஆகிய பிரதேசங்களிலும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை **யாழ் பிரதேசத்தில்** சுதந்திரபுரம், குட்டியப்புலம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** நாவற்காடு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு விமானப்படை-I மற்றும் II, முல்லைத்தீவு 59வது படைப்பிரிவு (14ESR- 01 மற்றும 14ESR- 02), SFHQ வற்றாப்பளை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மகாகச்சக்கொடிய பொகஸவேவ வரை, தீவீரகம (பெரிய உளுக்குளம்) ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# உழவர் பெரு விழாவில் கவிஞர் வைரமுத்து

(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பிற்பகல் 4 மணிகது நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இப்பெருவிழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராகத் தமிழகத்தின் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான வைரமுத்துவும் கலந்து கொள்கின்றனர்.

உழவர்களுக்கு மரியாதை செய்யும் விதமாக நடைபெறவுள்ள இந்த உழவர் பெருவிழாவில் மாவட்டரீதியாக 2015ஆம் ஆண்டுக்கான சிறந்த வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையாளர்களும், சேதனப் பயிர்ச்செய்கையாளர்களும், கால்நடைப் பண்ணையாளர்களும், கோழிப் பண்ணையாளர்களும் விருது கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்போது பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



எண்ணற்ற பிறவிகள், சொர்க்கங்கள், நரகங்கள் இவை மூலமாக நாம் கற்றுக் கொள்ளவேண்டியபாடம் இதுதான். வேண்டும் என்று கேட்பதற்கோ, ஆசைப் படுவதற்கோ சொந்த ஆன்மாவைத் தவிர எதுவும் இல்லை.

பற்று வைப்பது, பற்றைவிடுவது இரண்டும் பூரணமாக வளர்க்கப்பட்டால் அவை மனிதனை உயர்ந்த வனாக, மகிழ்ச்சி நிறைந்தவனாக ஆக்குகின்றன.

வைரச்சுரங்கமாகிய நான், நன்மை மற்றும் தீமையாகிய கூழாங்கற்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறேன். தீமையே வா, உனக்கு மங்களம் உண்டாகட்டும்; நன்மையே நீயும் வா, உனக்கும் மங்களம் வரட்டும். என் காதுகளுக்கருகில் பிரபஞ்சமே தலைகீழாக வீழ்ந்தாலும் அதனால் எனக்கென்ன? அறிவு கடந்த அமைதியே நான். அறிவு நமக்கு நன்மையையோ தீமையையோ மட்டும்தான் கொடுக்கிறது. நான் அதற்கும் அப்பால் உள்ளேன். நானே அமைதி.

# கவாஜாவின் சதத்தால் அடிலெய்ட்டுவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது சிட்னி தண்டர்







பிக் பாஷ் லீக் இருபது-20 தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் 8விக்கெட்டுகளால் வெற்றி பெற்ற சிட்னி தண்டர் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த பிக் பாஷ் இருபது-20 லீக் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் அடிலெய்ட்டு ஸ்ட்ரைக்கர்- சிட்னி தண்டர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வென்ற அடிலெய்ட்டு அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அந்த அணியின் முன்னணி வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அலெக்ஸ் ராஸ் 47 ஓட்டங்களும், நேஸர் 16 பந்தில் 27 ஓட்டங்களும், ரஷித் 3 பந்தில் 14 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்தப் போட்டியில் இடம் பெற்றிருந்த ஜெயவர்த்தனே 2 ஆவது ஓவரில் வாட்சன் பந்தில் சிக்சர் விளாச ரசிகர்கள் உற்சாகமாகினர். ஆனால் அதே ஓவரில் 7 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார். இதனால் 20 ஓவர்கள் முடிவில் அந்த அணி 7 விக்கெட் இழப்பிற்கு 159 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 160 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சிட்னி தண்டர் களமிறங்கியது. அந்த அணியின் தொடக்க வீரர் கவாஜா 13 பவுண்டரி, 3 சிக்சர்கள் என 59 பந்தில் 104 ஓட்டங்கள் சேர்த்தார். இதனால் 17.4 ஓவரிலேயே அந்த அணி 160 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

வொட்சன் 8 பந்தில் 7 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றம் அளித்தார். அணித்தலைவர் மைக் ஹசி 11 ஓட்டங்கள் சேர்த்தார். இந்த வெற்றியால் சிட்னி தண்டர் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.(க)

# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்; 4வது சுற்றில் மரியா ஷரபோவா

கிராண்ட்சிலாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடந்து வருகிறது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 3 ஆவது சுற்று ஆட்டத்தில் 5 ஆம் நிலை வீராங்கனையும் 5 முறை கிராண்ட்சிலாம் பட்டம் வென்றவருமான மரியா ஷரபோவா (ரஷ்யா) அமெரிக்காவின் டேவிசை எதிர்கொண்டார். இதில் முதல் செட்டை ஷரபோவா எளிதில் கைப்பற்றினார். 2 ஆவது செட்டில் டேவிஸ் கடும் சவால் கொடுத்தார்.

அந்த செட்டை டேவிஸ் 7-6 (7-5) என்ற கணக்கில் கைப்பற்றினார். ஆனால் 3 ஆவது செட்டில் ஷரபோவா அபாரமாக விளையாடி கைப்பற்றினார். ஷரபோவா 6-1, 6-7 (5-7), 6-0 என்ற செட்கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.



மற்றொரு 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 12 ஆம் நிலை வீராங்கனையான பென்சிக் (சுவிட்சர்லாந்து) வென்று 4 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். அவர் உக்ரைன் வீராங்கனை பென்டாரேன் கோவை 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த 2 ஆவது சுற்று ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை மகரோவா 6-4, 6-2 என்ற நேர்செட் கணக்கில் ஜேர்மனியின் மரியாவை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். 2 ஆவது சுற்றில் ஜேர்மனியின் லுசிக்கி தோற்று வெளியேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 3 ஆவது சுற்று ஆட்டத்தில் 7ஆம் நிலை வீரரான நிஷிகோரி (ஜப்பான்), 26 ஆம் நிலை வீரர் லோபஸ் (ஸ்பெயின்) மோதினர்.

இதில் நிஷிகோரி 7-5, 2-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு 3 ஆவது சுற்று ஆட்டத்தில் 15 ஆம் நிலை வீரரான பெல்ஜியத்தின் கோபின் 6-1, 3-6, 7-6 (7-2), 7-5 என்ற செட் கணக்கில் டோமினிக் தீம்மை (அவுஸ்திரியா) வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (க)

# அயர்லாந்து கிரிக்கெட் அணியின் ஆலோசகராக வாஸ் நியமனம்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் அயர்லாந்து அணிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் முக்கிய பந்துவீச்சாளராக திகழ்ந்த சமிந்த வாஸ், 355டெஸ்ட் விக்கெட்டுகளும், 400 ஒருநாள் விக்கெட்டுகளும் வீழ்த்தி சாதனை படைத்தவர்.

இவர் தனது ஓய்வுக்கு பின்னர் 2012ஆம் ஆண்டு நியூசிலாந்து அணியின் பந்துவீச்சு ஆலோசகராக பணியாற்றினார்.

அதன்பின் 2013 ஆம் ஆண்டில் இருந்து கடந்த ஆண்டு வரை இலங்கை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக இருந்தார்.

இந்நிலையில் இந்தியாவில் நடக்கவிருக்கும் இருபது-20 உலகக்கிண்ணப் போட்டிகளில் சிறப்பாக செயற்படுவதற்காக அயர்லாந்து அணி, சமிந்த வாஸை அணியின் ஆலோசகராக நியமித்துள்ளது.


இந்தியாவில் நடைபெறும் இருபது-20 உலகக்கிண்ணம் வரை அந்த அணியின் ஆலோசகராக வாஸ் செயற்படுவார்.

இது பற்றி சமிந்த வாஸ் கூறுகையில்,

“அயர்லாந்து அணியில் ஏராளமான திறமை மற்றும் அனுபவம் உள்ள வீரர்கள் உள்ளனர். என்னால் அவர்களுக்கு கூடுதலாக வலுச்சேர்க்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

அந்த அணியின் அதிகாரிகளுடன் நான் கலந்து கொள்ள இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது” என்று கூறியுள்ளார். (க)

# ஆறுதல் வெற்றிபெறுமா இந்தியா வெள்ளையடிப்பு செய்யுமா அவுஸ்




இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 5 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி சிட்னியில் இன்று நடைபெறவுள்ளது.

டோனி தலைமையிலான இந்திய அணி 4 போட்டியிலும் தோற்று மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. இதனால் இன்றைய ஆட்டத்திலாவது இந்திய அணி வெற்றி பெற்று ஆறுதல் பெறுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. கான் பெராவில் நடந்த 4 ஆவது ஆட்டத்தில் வெற்றி பெற இருந்த வாய்ப்பை இந்திய வீரர்கள் வீணடித்து விட்டனர். டோனியின் தவறான அணுகுமுறை பாதிப்பை ஏற் படுத்தியது.

புதுமுக வீரர்கள் குர்கெரத்சிங், ரிஷிதவான் ஆகியோர் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. இருவரும் இன்றைய ஆட்டத்தில் நீக்கப்படலாம். கடந்த இரண்டு போட்டியிலும் நீக்கப்பட்ட அஸ்வின் இடம் பெறுவார் என்று தெரிகிறது.

பட்டிங்கில் வீராட் கோலி, ரோகித்சர்மா ஆகியோர் மட்டுமே நல்ல நிலையில் உள்ளனர். ரகானே காயம் அடைந்து இருப்பதால் இன்று ஆடுவாரா? என்பது உறுதியில்லை.

4 ஆட்டத்திலும் வென்று முத்திரை பதித்த அவுஸ்திரேலியா இந்தப் போட்டியிலும் வென்று 5-0 என்ற கணக்கில் வெள்ளையடிப்பு செய்யும் ஆர்வத்துடன் உள்ளது

சொந்த மண்ணில் தொடர்ச்சியாக 18 வெற்றியை பெற்ற அந்த அணி அதை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் போராடும். 2014 நவம்பர் மாதம் தென்னாபிரிக்காவிடம் தோற்ற பிறகு அவுஸ்திரேலியா இதுவரை சொந்த மண்ணில் வீழந்தது இல்லை.

இன்றைய ஆட்டம் காலை 8.50 மணிக்கு தொடங்குகிறது. ஸ்டார் ஸ்போர்ட்ஸ், தூர்தர்சனில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. (க)

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கடந்தாண்டில் 10,732 முறைப்பாடுகள்

## தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை தகவல்

(கொழும்பு)

இலங்கையில் நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித் துள்ள நிலையில், கடந்த வருடத்தில் மாத்திரம் 10732 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாசா பாலேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை குறிப்பிட்டார். இந்த




சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு பல புதிய திட்டங்களை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு தாம் நீதி அமைச்சை கோரியுள்ளதாகவும், அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் அந்த சட்டத்தை கடுமையாக முறையில் அமுல்படுத்துவதாகவும் அவர கூறினார்.

ஏனெனில், மீண்டுமொரு முறை இந்த தவறை எவரும் செய்யாத அளவிற்கு கடுமையான தண்டணைகள் வழங்கப்பட வேண்டும் என நடாசா பாலேந்திரன் தெரிவித்தார்.

புதிய சில திட்டங்களுக்கு அமைய முதலாவதாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் துஷ்பிரயோகம் தொடர்பான தெளிவூட்டலை வழங்குவது தொடர்பிலும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், பாலியல் கல்வியை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதன் ஊடாக துஷ்பிரயோகங்களை தடுக்கலாம் எனவும் அவர் கூறினார்.

அதுமட்டுமின்றி, இந்த துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகளை வார நாட்களில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் மட்டுமே விசாரணை செய்வதற்கான கோரிக்கையையும் நீதி அமைச்சிடம் தான் முன்வைத்துள்ளதாக நடாசா பாலேந்திரன் தெரிவித்தார்.

மேலும், குடும்பத் தலைவரான தந்தையை தெளிவூட்டுவதன் மூலமும் துஷ்பிரயோங்களை குறைக்க முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அத்துடன், குழந்தைகள் காப்பகம், குழந்தைகள் நல அமைப்புகளில் உள்ளவர்களுக்கு அதிகமான பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டங்களையும் தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான தனியான பொலிஸ் பிரிவொன்றை உருவாக்குவது தொடர்பிலும், சம்பந்தபட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் நடாசா தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வருடம் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகம் இடம்பெற்ற மாவட்டங்களாக கம்பஹா, கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் பதிவாகியுள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 100 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாசா பாலேந்திரன் தெரிவித்தார். (செ-12)

## செய்தியில் திருத்தம்

வடமாகாணத்தில் பார்த்தீனியம் அழிப்புக்கு 101 சட்டநடவடிக்கை அலுவலர்கள் நியமனம் என்னும் தலைப்பில் வலம்புரிப் பத்திரிகையின் (22.01.2016) திகதி 10-ம் பக்கத்தில் வெளியான செய்தியில் சட்ட உத்தியோகத்தர் ஸ்ரீசண்முகான் கோகுலன் என்பவருக்கு பதிலாக சட்ட உதவியாளர் சி.கோகுலன் என தவறி பிரசுரிக்கப்பட்டுள்ளது. செய்தியை திருத்தத்துடன் வாசிக்கவும். (செ)

## தரம் 5 புல...

ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்திற்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பரீட்சை டிசம்பர் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-12)

## விசர் நாய்...

ன்றன.

மேற்படி 11 பேரையும் கடித்த நாய், நேற்று வெள்ளிக்கிழமை காலையில் இறந்துவிட்டதையடுத்து, அங்கு சென்ற தென்மராட்சிப் பிரதேச கால்நடை வைத்தியதிகாரி க.இரகுநாதன், நாயின் தலையை வெட்டியெடுத்து பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

வீடொன்றில் வளர்க்கப்பட்ட இந்த நாய் ஒரே குடும்பத்தைச் சேர்நத 7 பேர் உட்பட 11 பேரையே கடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

## குடும்பப்...

சேர்ந்த பாலகுமார் சுபாசினி (வயது 23) என்ற இரு பிள்ளைகளின் தாயாரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெண்ணின் வீட்டிற்கு வருகை தந்த அயல் வீட்டுப் பெண்ணுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் குறித்த பெண்ணை பாலைக் கத்தி மூலம் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

இதில் முதுகுப்பகுதியில் பலத்த காயங்களுக்கு இலக்கான மற்றைய பிரஸ்தாப பெண் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-12,30)

## பேருந்து சாரதி தாக்கப்பட்டார்

(கரணவாய்)

இலங்கைப் போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலையின் முல்லைத்தீவு பேருந்தின் சாரதி ஒருவர் வேலை முடிந்து வீடுதிரும்பிக்கொண்டிருந்த போது தாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த கந்தசாமி செந்தில்குமரன் (வயது-36) என்பவரே தாக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் வேலை முடித்துவிட்டு தம்பசிட்டி வழியாக வீடு திரும்பிக்கொண்டிரந்த போது பாடசாலை வீதிக்கு அருகாமையில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மூவர் இவரைத் தாக்கியுள்ளனர்.

கொட்டன்களால் தாக்கப்பட் இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தன்னிடமிருந்த கைத் தொலைபேசி பறிக்கப்பட்டதாக தெரிவித்த அவர் கை மணிக்கூடு மற்றும் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலிகளையும் காணவில்லைஎன முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## அறிவிலிகளாக நாம்...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நேற்று நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் கலந்து கொண்டார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்,

எமது நாட்டில் முட்டாள் சிங்கள பௌத்தர்கள் இருக்கின்றனர். முட்டாள் முஸ்லிம்களும் இருக்கின்றனர்.

முட்டாள் தமிழர்களும் இருக்கின்றனர். நான் இப்படி கூறுவதற்கு மன்னிக்கவும், அறிவிலியாக செயற்படுவதை நாம் நிறுத்த வேண்டும். எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வோம்.

எமது தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்வோம். ஏனையவர்களின் தனித்துவத்திற்கும் மதிப்பளிப்போம். அந்தத் தனித்துவங்களும் மேம்பட இடமளிப்போம். அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் தேசமாக நாம் பயணிக்க வேண்டும்.

தேசியப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொள்வது எளிதான விடயமல்ல. ஆனால் அதற்கான தீர்வை நாம் அறிவிலிகளாக தேடக்கூடாது.

தேசத்தின் நலனையும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் கருத்தில் கொண்டே தீர்வுக்கான நகர்வுகள் பயணிக்க வேண்டும்.

இதில் சிரமங்கள் பல இருந்தாலும் சமாதான சூழலை தொடர்ந்தும் தக்க வைப்பதற்கு நாம் இதை முயற்சிக்க வேண்டும்.

அந்த முயற்சியே எமக்கு நல்லதொரு வெற்றியைத் தரும் என சந்திரிகா தனதுரையில் நம்பிக்கை தெரிவித்தார். (செ-12)

## யாழில் கவிப்பேரரசு வைர...

சி.வி.விக்னேஸ்வரனை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

வட மாகாண விவசாய அமைச்சின் 2016ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா இன்று சனிக்கிழமை முல்லைத்தீவு, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

அந்தநிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொளவதற் காக வருகை தந்த அவர் மரியாதையின் நிமித்தம் வடமாகாண முதலமைச்சரை நேற்றையதினம் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போதுதனது கவிதை நூல்களை முதலமைச்சருக்கு அன்பளிப்பாக வழங்கியதுடன் ஒரு தொகுதி நூல்களை யாழ் பொது நூலகத்துக்கு முதலமைச்சர் ஊடாக அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

மேலும் கவிப்பேரரசு வைரமுத்துவுடன் இணைந்து தமிழ் நாட்டை சேர்ந்த 4 தொழிலதிபர்கள் வருகைதநதுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (செ-9)

## இந்.போர்க் கப்பலை...



குழுவொன்று நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டது.

'ஐ என்எஸ் மைசூர்' என்ற நாசகாரி ஏவு கணைப் போர்க்கப்பலுடன் கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்த 'ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவை அன்று பிற்பகல் இலங்கை அமைச்சர்கள், முப்படைகளின் தளபதிகளை இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா அழைத்துச் சென்றார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவி விஜேகுணவர்த்தன, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் குகன் புலத்சிங்கள, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளே 'ஐஎன்எஸ் விக்கிரமாதித்யாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்களை, இந்தியக் கடற்படையின் மேற்குப் பிராந்திய கப்பற்படையின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் ரவ்நீத் சிங், 'ஐ என்எஸ் விக்கிரமாதித்யா'வின் கட்டளை அதிகாரி கப்டன் கிருஸ்ணா சுவாமிநாதன் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்று, விமானந்தாங்கிக் கப்பலைச் சுற்றிக் காண்பித்து, அதன் திறன்களையும் விபரித்தனர். (செ-12)

# மக்களின் பிர...

பாடுபடுமாறு அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

புத்தளம் சாலியவெவ மாதிரி மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழிலநுட்ப ஆய்வுகூடத்தினை மாணவர்களிடம் கையளிக்கும் வைபவம் நேற்று முற்பகல் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இக்கோரிக்கையை விடுத்தார்.

விருப்புவாக்கு இல்லாதுபோகும் என்ற அச்சத்தினால் மக்களின் நன்மைக்காக மேற்கொள்ளப்படவேண்டிய தீர்மானங்களை காலந்தாழ்த்தக் கூடாதென தெரிவித்த ஜனாதிபதி, அபிவிருத்தியின்போது சரியான தீர்மானங்களை மேற்கொள்ள எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லையெனக் குறிப்பிட்டார்.

நாடு பூராக நிலவும் ஆசிரியர் பிரச்சினை தொடர்பாக கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை வெற்றிடம் நிலவும் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு உரிய தீர்மானங்களை மேற்கொள்ளுதல் அத்தியாவசியமாக மாறியுள்ளதெனத் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தின் கல்வி நடவடிக்கைகளில் நிலவும் பிரச்சினை காரணமாக குருநாகல் மாவட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த மேல்மாகாண கல்வி அமைச்சர் பதவியை தான் இம்முறை புத்தளம் மாவட்டத்திற்கு வழங்கியதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அனைவரும் ஒன்றிணைந்து மாவட்டத்தின் கல்வியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

முழு நாட்டுக்குமாக ஒரே ஒரு நிகழ்ச்சி நிரலே தன்னிடம் உள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி தன்னிடம் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இல்லை எனவும் 5 ஆண்டுகளின் பின்னர் நான் எங்கு இருக்கப் போகின்றேன் என்பதனைவிட ஓர் உன்னத நாடாக தனது தாய் நாடு இருக்க வேண்டிய இடத்தினையே நான் முக்கியமானதாகக் கருதுகின்றேன்.

புத்தளம் சித்தார்த்த ஆரம்ப பாடசாலையின் பெற்றோர்கள் அப்பாடசாலையின் குறைபாடுகள் உள்ளடங்கிய ஓர் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

அதுபற்றி கவனம் செலுத்திய ஜனாதிபதி, இக்குறைபாடுகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க மற்றும் வடமேல் மாகாண கல்வி அமைச்சர் சந்தியா குமார ராஜபக்ஷ ஆகியோருக்கு ஆலோசனை வழங்கியதுடன், அவற்றை துரிதமாக கண்டறிந்து பூர்த்தி செய்வதாக அவர்கள் ஜனாதிபதி முன்னிலையில் பெற்றோர்களிடம் வாக்குறுதியளித்தனர்.

ஜனாதிபதியின் வருகையை நினைவுகூர்ந்து நினைவுச்சின்னம் ஒன்றினை அதிபர், ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

அத்துடன் புத்தளம் தம்போவ மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய தொழிலநுட்ப ஆய்வுகூடத்தினை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் கரங்களினால் மேற்கொள்ளப்பட்டது.

கல்லூரிக்கு வருகை தந்த ஜனாதிபதி, மாணவர்களினால் ஆரவாரமாக வரவேற்கப்பட்டதுடன், புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினை மாணவர்களிடம் கையளித்ததுடன அங்கு மேற்பார்வை விஜயத்தையும் மேற்கொண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பற்றிக் கேட்டறிந்தார்.

2015ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சையில் விசேட திறமைகாட்டி, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மூன்று மாணவர்களுக்கு ஜனாதிபதி சின்னாங்களை வழங்கிவைத்தார்.

இராஜாங்க அமைச்சர்களான பாலித்த ரங்கே பண்டார, பிரியங்கர ஜயரத்ன ஆகியோர் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

அத்துடன் 15 மில்லியன் ரூபாய் செலவில நிர்மாணிக்கப்பட்ட புத்தளம் கருவலகஸ்வெவ புதிய நாடக அரங்கினை மக்களிடம் ஒப்படைத்தலும் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டது.

வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (செ-12)

# மைக்ரோசாப்...

வர் ஜோன் ஃபிலிப் கோடிஸ் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மாநாட்டில், பங்கேற்றுள்ள பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தலைவருக்கும் இடையில இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் முன்னேற்றத்திற்காக, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கும் தகவல் தொழிநுட்பம், கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு துறைகளை டிஜிட்டல் மயப்படுத்துதல் போன்றவற்றுக்கு தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்க தயாராக உள்ளதாகவும் அவர குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பில்ஆய்வுகளை மேற்கொள்ள தமது விசேட துறைசார் வல்லுநர்களை விரைவில் இலங்கைக்கு அனுப்புவதற்கும் மைக்ரோசொப்ட் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

குறித்த சந்திப்பு சுவிட்ஸர்லாந்தில், டாவோஸ் நகரில் இடம்பெற்றதாக பிரதமரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.(செ-12)

# சுவிஸ் ஜனாதிபதி...

டர் அம்மேனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இந்த சந்திப்பு ட்வோஸ நகரில் உள்ள சுவிட்ஸர்லாந்து ஜனாதிபதியின சொந்த வீட்டில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2016-ம் ஆண்டுக்கான உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட ந்த 19-ம திகதி சுவிட்ஸர்லாந்துக்கு பயணமாகியிருந்ததுடன் பல்வேறு தரப்பினர்களையும் சந்தித்து வருகிறார்.

இந்நிலையிலேயே ரணில், சுவிட்ஸர்லாந்து ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (செ-12)


புலமைப்பரிசில்-வகுப்புக்கள்
தரம் தரம் தரம்
5 , 4 , 3
மாதிரிப் பரீட்சைகளும் விசேட வகுப்புகளும் ஆரம்பம்.
24-01-2016 (தைப்பூசம் அன்று) (நாளை)
ஆசிரியர் : மனோ . சுரேஸ்
(முன்னாள் கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர்)
(புலமைச் சிட்டுக்கள், புலமை பூக்கள், புலமை அரும்புகள், புலமைச் சூழல் புலமைத் துளிகள் நூலாசிரியர்)
- புலமைச்சிட்டு 1வது பரீட்சை - 24.01.2016
- பரீட்சை விரும்பிய 6 நேரங்களில்
- வெளி மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றமுடியும்
மேலதிக தொடர்புகளுக்கு (C-3528)
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P - 0774598440



நீங்கள் தொழில் தேடுபவரா?
படிச்ச படிப்புக்கு வேலை இல்லையே என்று அங்கலாய்க்கிறீர்களா?
கவலையை விடுங்கள்!



O/L உடன் Entry Level 3 in 1
Business & Hotel Management With IT & ENGLISH
பயிற்சி நிறைவில் சிறப்புச் சான்றிதழுடன்
விரும்பிய நாடு செல்லும் விசா ஏற்பாடு
முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு
Diploma in Business / Hotel Management
(சி-3529)
வேலைவாய்ப்பு, வெளிநாட்டு விசா வென்றவர்களின் கதைகளை அறிய www.sikaram.lk
SIKARAM Education - Job - Visa
நீங்களும் வெற்றிபெற: 077 36 16 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)



sunway
மைக் யுனிபா எனர்ஜி சிஸ்டம் (தனி) நிறுவனத்துடன்
கைகோருங்கள்
Mike Unipar Energy Systems (Pvt) Ltd நிறுவனமானது மோட்டார் சைக்கிள் பற்றரிகள் மற்றும் யுபிஎஸ் பற்றரிகளை இறக்குமதி செய்து சன்வே எனும் பெயரில் விநியோகிக்கும் நிறுவனமாகும். இந் நிறுவனமானது சீனாவின் பிரசித்திபெற்ற நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் மோட்டார் சைக்கிள் பற்றரிகள் மற்றும் யுபிஎஸ் பற்றரிகளை விநியோகிக்கும் ஏக முகவர் என்பதில் பெருமைகொள்கின்றோம்.
வடமாகாணத்திற்கான
விநியோகத்தர்களை
நாம் தற்போது எதிர்பார்கின்றோம்.
தேர்வு செய்யப்படும் விநியோகத்தர்கள் தேவையான மனித வலு, உட்கட்டமைப்பு வசதிகள், சேவைக்கான வாகன வசதிகளை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
மேலதிக தகைமைகள் :
- வங்கி உத்தரவாதம் வழங்கக்கூடியவராக இருத்தல்
- வியாபார நுணுக்கங்கள்
- சந்தைப்படுத்தலில் முன்னனுபவம் இருத்தல்
(சி-3514)
விண்ணப்பிக்கும் முறை
ஆர்வமுள்ளவர்கள் மின்னஞ்சல் மூலம் நம் அலுவலகத்திற்கு நிலையான விண்ணப்பப்படிவத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.
Our E-mail : gm@mikeunipar.com
அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் கீழுள்ள முகவரிக்கு 03-02-2016 ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
Head of Operation
MIKE UNIPAR ENERGY SYSTEMS (PVT) LTD
65/11, orchid Place, off Swarnadisi Place,
Koswatta, Nawala.
T/P : 077-7587013 (Tissa) 071-6348555 (Aruna)
(During office hours )
JEBZ



New College of Technology (NCT) Jaffna
யாழ்.நகரில் A/L தொழில்நுட்ப துறைக்கு புதியதோர் தனியார் கல்வி நிறுவனம்
பாடங்கள்
01. பொறியியல் தொழில்நுட்பம்
02. உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
03. தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
04. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
05. வணிகக்கல்வி
06. புவியியல்
07. ஊடக தொடர்பாடல் கற்கைநெறி
08. விவசாயம்
2018 A/L
2017 A/L
2016 A/L
Day Class (2015)



(3376)
ஆரம்பம் :- 24.01.2016 நாளை ஞாயிறு காலை 9.30 மணி
1. (பொறியியல் தொழில்நுட்பம், 2. உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு செய்முறை வகுப்புக்களும் நடைபெறும்) 24.01.2016 அன்று காலை 9 மணி முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 0766370551
இல.23, பலாலி வீதி, பருத்தித்துறை வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். (யாழ் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)
Facebook/New College of technology - Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.